பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 6.00

வலம்புரி

VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 பங்குனி 28 வெள்ளிக்கிழமை (11.04.2003) தொலைபேசி~ 2223378 ஒலி 113

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

# இடம் பெயர் சேவையின்போது புத்தளத்தில் முஸ்லிம்கள் பெரும் கோஷ்டி மோதல்

## துப்பாக்கிப் பிரயோகம்-கர்ப்பிணி உட்பட 10பேர் படுகாயம்

(புத்தளம் நிருபர்)

**புத்தளத்தில் புனர்வாழ்வு அமைச்சர் பேராசிரியர் ஜயலத் ஜயவர்த்தனா கலந்து கொண்ட உலர் உணவு நிவாரண இடம் பெயர் சேவையில் றிசாட் பதியுதீன் எம்.பியின் ஆதரவாளர்களுக்கும்,வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூரின் ஆதரவாளர்களுக்கும் இடையில் நேற்றுக் காலை இடம் பெற்ற மோதலில் கர்ப்பிணிப் பெண் ஒருவர் பலத்த காயங்களுக்குள்ளாகி புத்தளம் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.இதனையடுத்து இடம் பெயர் சேவை உடன் இரத்து செய்யப்பட்டது.**

புத்தளம் மாவட்ட எம்.பி றிசாட் பதியுதீனால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த உலர் உணவு நிவாரண இடம் பெயர் சேவை நேற்றுக் காலை புத்தளம் புனித அன்ரூஸ் மகா வித்தியாலயத்தில் நடை பெற்றது.

புத்தள மாவட்டத்தில் உள்ள நலன்புரி நிலையங்களில் வாழுகின்ற வட மாகாண முஸ்லிம் மக்களுக்கு உலர் உணவு நிவாரணம் வழங்குவது தொடர்பாகவே இந்த இடம் பெயர் சேவை நடைபெற்றது.

இந்த இடம்பெயர் சேவையில் புத்தளம் மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் இருந்து சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமான முஸ்லிம் மக்கள் கலந்து கொண்டனர்.

புத்தளம் புனித அன்ரூஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இந்த இடம்பெயர் சேவைக்கு வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர்

(10ம்பக்கம் பார்க்க)

## பிரதமர் வாஜ்பாயுடன் ஜனாதிபதி சந்திப்பு

(புதுடில்லி)

நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற் கொண்டு இந்தியா சென்றுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பிரதமர் அடல் பிகாரி வாஜ்பாய், துணைப் பிரதமர் எல்.கே.அத்வானி, ஜனாதிபதி அப்துல் கலாம், வெளியுறவு அமைச்சர் ஜஸ்வனசிங்ஹா, எதிர்க்கட்சித் தலைவி சோனியா காந்தி ஆகியோரை நேற்றுச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இப் பேச்சுக்களின் போது இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக நோர்வே அரசின் அனுசரணையுடன் நடைபெறும் அரசு-புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாகவும் முல்லைத்தீவு கடற்பிராந்தியத்தில் சீன மீன்பிடிக் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சம்பவம்,அது தொடர்பான யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அறிக்கை என்பன குறித்து இந்தியத் தலைவர்களுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விரிவாக விளக்கிக் கூறியுள்ளார்.

இதேவேளை பிரதமர் வாஜ்பாய் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு தனிப்பட்ட விருந்துபசாரம் அளித்து கௌரவித்துள்ளார்.

(வ)

## கலைஞரின் மகன் ஸ்ராலின் கைது



தமிழ்நாட்டுக் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டபோது...



செய்தியாளர்களுக்கு ஸ்ராலின் பேட்டி

## ஈராக்கில் இடைக்கால அரசை அமைக்க அமெரிக்கா முயற்சி

(வெளிநாட்டு செய்திச் சேவை)

ஈராக்கின் தலைநகர் பாக்தாத் அமெரிக்க கூட்டணிப் படையினரிடம் வீழ்சசி அடைந்து வருவதை அடுத்து ஜனாதிபதி சதாம்ஹுசைனின் 23 வருட சர்வாதிகார ஆட்சிக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுள்ளதாக சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

ஈராக்கிற்கெதிராக அமெரிக்க கூட்டணிப் படையினர் போர் தொடுத்து 21வது நாளான நேற்று சதாம்ஹு சைனின் வீழ்ச்சி குறித்து எகிப்திய அதிபர் முபாரக் ஈராக்கின் ஆட்சிப் பொறுப்பை ஈராக்கிய மக்களிடமே ஒப்படைக்க வேண்டும் என முதன் முதலாக கருத்து வெளியிட்டுள்ளார்.

இது இவ்வாறிருக்க ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைனால் நாடு கடத்தப்பட்ட ஈராக்கின் தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவராக இருந்த அகமது சலாபி ஈராக்கின் இடைக்கால அரசின் புதிய அதிபராக நியமனம் பெறுவார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அகமது சலாபி அமெரிக்காவின் துணை ஜனாதிபதி டிக்சென்னியின் நெருங்கிய நண்பரென்றும் அவரையே ஈராக்கின் இடைக்கால அதிபராக அமெரிக்கா நியமிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

## சிறுமி மீது பாலியல் வன்முறை சந்தேக நபர் கைதானார்

(யாழ்ப்பாணம்)

சிறுமி ஒருத்தியை கடத்திச் சென்று தகாத நடத்தையில் ஈடுபடுத்திய குருநகர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 39வயதுடைய நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரஸ்தாப நபர் அதே இடத்தைச் சேர்ந்த 15வயதுச் சிறுமியை தந்திரமாகக் கடத்திச் சென்று ஆனைக்கோட்டை சாவற்காட்டில் உள்ள வீடொன்றில் மறைத்து வைத்திருந்தார்.

சிறுமியின் பெற்றோர் இச் சம்பவம் குறித்து யாழ்.பொலிஸாருக்கு முறையிட்டனர்.இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையினால் நேற்று முன்தினம் இரவு ஆனைக்கோட்டையில் வைத்து பிரஸ்தாப நபர் கைது செய்யப்பட்டதுடன் சிறுமியும் மீட்கப்பட்டார்.

(10ம் பக்கம் பார்க்க)

## பரீட்சைப் பெறுபேறுகள் வந்து சேர்ந்தன

(கொழும்பு)

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த (சாதாரண தர)பரீட்சைப் பெறுபேறுகள் குடாநாட்டுப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.மேற்படிப் பரீட்சைப் பெறுபேறுகளின்படி இவ்வாண்டு க.பொ.த உயர் தரத்திற்கு கூடுதலான மாணவர்கள் தகைமை பெற்றுள்ளதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

4லட்சத்து 32 ஆயிரம் மாணவர்கள் க.பொ.த(சா/த)பரீட்சைக்குத் தோற்றி 1லட்சத்து 32ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் க.பொ.த உயர் தரத்திற்கு தகைமை பெற்றிருந்தனர் எனவும் பரீட்சைத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

(வ)

## பாதிக்கப்பட்ட சிறுவருக்கான ஆய்வுப் பட்டறை ஆரம்பம்

(கிளிநொச்சி)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான ஆய்வுப் பட்டறை கிளிநொச்சியில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன மாநாட்டு மண்டபத்தில் நேற்று ஆரம்பமானது.இரண்டு தினங்கள் நடை பெறும் இப் பட்டறையானது யுனிசெவ்,ரி.ஆர்.ஓ ஆகியவற்றின் அனுசரணையுடன் நடைபெறுகின்றது.

இவ் ஆய்வுப் பட்டறையில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் பிரதமரின் சமாதானச் செயலகத்தின் பிரதிநிதிகள்,வடக்குக் கிழக்கு அரச அதிபர்கள்,வடக்குக் கிழக்கு கல்வி அதிகாரிகள் விடுதலைப் புலிகளின் கல்விப் பொறுப்பாளர், மருத்துவ

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இறைவனை விக்கிரகத்தில் வழிபாடு செய்தலினும் இலிங்கத்தில் வழிபாடு செய்தல் சிரேஷ்டமானது

**வெள்ளி நற்சிந்தனை**

சிவலிங்கம் என்னும் சொற்றொடா 'சிவமாகிய லிங்கம்' என விரிந்து இலிங்கத்தின் தன்மை சிவம் எனப் பொருள்படும்.இலிங்கம் என்னும் சொல் 'அடையாளம்' என்னும் பொருளை உணர்த்தும். ஒரு பொருளை நேரில் காட்ட முடியாத சந்தர்ப்பத்தில் அப்பொருள் இத் தன்மைத்தாய் இருக்கும் என்று அத் தன்மையை விளக்குகின்ற ஒரு குறியைக்காட்டுவது வழக்கம்.அது போல சிவமாகிய பொருளை நேரில் காட்ட முடியாத சந்தர்ப்பத்தில் அச்சிவப்பொருள் இத்தன்மைத்து என்று காட்டும் அடையாளமே (குறியே) இலிங்கம். உருவப் பொருள் அல்லாத சிவப் பொருளை குறிப்பதே இலிங்கம் எனப்படும்.

### அகண்ட வெளி

சிவம் எனும் சொல் மங்கலம் எனப்பொருள்படும். இத்தகைய மங்கலப்பொருளின் வடிவம் யாதாகும் என்று ஆராய்ந்தால,அது பரவெளி என்று அமையும். எல்லாப் பொருள்களோடுகூடியும்,அப்பொருள் களில் நின்றும், பிரிந்தும், அப் பொருள்களிற் பற்றில்லாதும்இருக் கும் பொருள் அகண்ட வெளியாக இருத்தல் வேண்டுமேயொழிய, உருவமாகவோ,அருவுருவமாகவோ இருத்தல் இயலாது. இது ஆகாயம் போன்றதாகும். ஆகாயமானது நிலம்,நீர்,தீ,காற்று முதலிய நான்கு பூதங்களோடு கூடியும்,பிரிந்தும் பற்றின்றியும் நிற்கும். சிவமும் எப்பொருள களோடும்கூடியும் தனித்தும் பற்றின்றியும் நிற்கும். ஆகையால் சிவத்தின் வடிவம்பரவெளியாகும். ஆகாயம் பூதவெளி-அறிவில்லாத சடம்.சிவம் பரவெளி-அறிவுடைய சிதது. இப்பரவெளியை 'சிதாகாயம' எனறும்'ஞானா காயம்' என்றும் பெரியோர்கூறுவர்.

### சிவலிங்கத் திருமேனி

அப்பரவெளியாகிய சிவப் பொருளை வழிபட்டு உய்வதற்கு அவருடைய தோற்றம் வேண்டும். தோன்றாதபொருளிடத்து வழிபாடு செல்லாது.எனவே இம்மண்ணுல



கத்துள்ளார் கட்வுளை வழிபடுவதற்கு பார்த்த மாத்திரத்தே பொதுவான அறிவுடையார்க்கு 'கடவுள்' என்ற எண்ணமும் சிறப்பான அறிவுடையார்க்குட் பரவெளியாகிய'சிவம்' என்ற எண்ணமும் உணடாகும் பொருட்டு அப்பரசிவமே சிவலிங்கமாகிய திருமேனியைக் கொண்டுள்ளார்.இறைவன் கருணைப் பெருக்கால் தோன்றிய சிவலிங்கத் திருமேனியை சுயம்புலிங்கம் என்பர். ஒருவராற் செய்யப்படாது தானாகவே தோன்றியது சுயம்புலிங்கம்.

பூதவெளியாகிய ஆகாயத்தை உற்று நோக்கும்போது அது உயர்ந்தும் அகன்றும் தோன்றும். உயர்ந்த தோற்றம் 'அததம்'என்பதையும் அகன்ற தோற்றம் எல்லாம்தன்னுள்ளும்,தான் எல்லாவற்றுள்ளும் என்பதையும் உணர்த்தும். இவ்வாறே ஞானவெளியாகிய சிவப்பொருளும் விளங்கும் என்பதை உணர்த்துதற்கே அச் சிவப்பொருளின திருமேனியாகிய சிவலிங்கம் உயர்ந்தும் வட்டமாக அகன்றும் அமைந்துள்ளது.சிவபிரான் படைத்தல் முதலிய ஐந்தொழில்களாற் பிரபஞ்சத்தை சித்திரிக்கிறார் என்றும் பொருள் கொள்வர்.

### சிற்சக்தி

சிவலிங்கத்தின் கீழ் காணப்படும் 'ஆவுடையார்' சிற் சக்தியை குறிப்பதாம் பரமசிவமாகிய பரவெளியில் எப்பொழுதும்ஓர் அசைவுண்டு .அவ்வசைவைச் சிற்சக்தி என்பர். ஆவுடையார் பரவெளியாகிய சிவலிங்கத்தின் கீழ் அடங்கிக்காணப்படுகிறது. இந்தஆவுடையார் வளைந்திருப்பதோடு அமையாது ஒரு பக்கத்தில் சிறிது நீண்டும் இருக்கிறது. இதற்கு'கோமுகி' என்று பெயர். கோவாகிய பசுக்களை (உயிர்களை) தன்னிடத்து அழைத்து மல நீக்கம் செய்து சிவமாக்கும் செயலுக்கு அறிகுறியாய் அமைந்துள்ளது என்பதாம்.தன் நிலைமை மன்னுயிர்கள் சாரத் தருஞ்சக்தி என்று பெரியோர் கூறியுள்ளனர்.

ஆவுடையாரின் கீழ் எண் கோணமாகவும் அவ்வெண்கோணத்தின் கீழ் நாற்கோணமாகவும் பிரதிட்டா லிங்கம் அமைந்திருக்கிறது. இவற்றின் கருத்து என்னவெனில் நான்கு திக்கும் எட்டுக்கோணங்களுமாயிருக்கிற எல்லா அண்டங்களும், சகதியினால் ஆக்கப்படுவன என்பதையும் அவையெல்லாம் சக்தியுள் அடங்கும் என்பதையும் உணர்த்தும் பொருட்டாகுமாம்.

இறைவன் இங்ஙனம் சக்தியும் சிவமும் எனப் பெண்பாலாகவும், ஆண் பாலாகவும் தம்முள் இருவேறு வகைப்பட்ட தன்மைகள் உடையனாயிருத்தலால் அவ்வுலகம் எல்லாம் ஆண், பெண் என்ற இரு பகுதியாக இயங்குகின்றன. இலிங்கம் என்பது சிவமேயாம்.

### விக்கிரக வழிபாடு

இச் சிவலிங்கம் பரவெளியாகிய அருவத்தைக்காட்டுகின்ற உருவமாய் இருப்பதால் அருவுருவத் திருமேனி எனப்படும்.சிவலிங்கம் மூன்று வகைப்படும்1) அவ்வியக்த லிங்கம் பீடமும் இலிங்கமுமாயிருப்பது 2) வியக்தாவியக்தலிங்கம்-இலிங்கத்தில் முகமும்தோள்களும் வெளிப்பட்டிருப்பது. 3) வியக்தலிங்கம்- எல்லா அவயவங்களும் வெளிப்பட்டுஇருக்கும், சந்திரசேகரர் முதலிய மகேஸ்வர வடிவங்கள்.சிவலிங்கபேதம் வேறு வகையாகவும் கூறப்படும். திருக்கோயில் தூபி - தூலலிங்கம் எனவும் விமானத்துள் எழுந்தருளியிருக்கும் சிவலிங்கம்-சூக்குமலிங்கம் எனவும் அதற்கு முன்னுள்ள பலிபீடம் பத்திர லிங்கம் எனவும் கொள்ளப்படும்.

இறைவனை விக்கிரகத்தில் வழிபாடு செய்தலினும் இலிங்கத்தில் வழிபாடு செய்தல் சிரேஷ்ட மானது. எனவே மகேஸ்வர வடிவங் களுக்கும் மேலாயது சிவலிங்கம் என்பதும் அவ்வழிபாடு மிக்க சிறப் புடையது என்பதும் சிவாக நூல் துணிபு ஆகும். சிலர் சிவலிங்க வழிபாடு வேதத்தில் விதிக்கப்பட்ட வில்லை என்று ஆராய்ச்சி செய்கின்றனர்.வேறுசிலர் விக்கிரகவழிபாடே வேதத்தில் கிடையாது என்று கூசாமல் கூறுகின்றனர். இருப்பினும் சிவபிரானை விக்கிரகவழிபாடு செய்து வழிபடுவரின் தவவலிமையிலும் லிங்கத்தில் அர்ச்சிக்கிறவர்களின் தவ வலிமை சிறந்தது என்றுவியாசர் மகாபாரதத்தில் உள்ள ஒரு நிகழ்ச்சியில் விளக்கிக்காட்டுகின்றார்.

**'சக்தியும் சிவமும் ஆயதன்மை இவ் வுலகம் எல்லாம்**
**ஒத்துஒவ்வாஆணும்பெண்ணும் உணர் குணகுணியுமாகி**
**வைத்தனன் அவனால் வந்த ஆக்கம் இவ்வாழ்க்கை எல்லாம்**
**இத்தையும் அறியார் பீட இலிங்கத்தின் இயல்பும் ஓரார்.**

-சிவஞான சித்தியார்.

**தொகுப்பு: மதிவாணன்**

---

## வருடாந்த உற்சவம்

(நெல்லியடி)

துன்னாலை கலிகைக் கந்தன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த திங்கள் அன்று ஆரம்பமானது.

எதிர்வரும்16,17ஆம் திகதிகளில் முறையே ஆலயத்தின் தேர்,தீர்த்த உற்சவங்கள் இடம்பெறவுள்ளன. (உ-44)

## தரிசாக மாறும் வயல் நிலங்கள்

(கல்வயல்)

தென்மராட்சிப் பகுதியில் உள்ள சில வயல் நிலங்களில் முற்றாக மிதிவெடி அகற்றப்படாதமையினால் விவசாயத்தினை மேற்கொள்ள முடியாதநிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பாக தனங்கிளப்பு, மறவன் புலோ,அறுகுவெளி, துண்டிப்பகுதி ஆகிய இடங்களிலேயேஇவ்வாறு வயல் நிலங்கள் பயிர்செய்கை பண்ணப்படாது தரிசு நிலங்களாக மாறியுள்ளன. (உ-111)

## தொடர்பு கொள்க!

(யாழ்ப்பாணம்)

கீழே பெயர் குறிப்பிட்டவர்களை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளது.

* சிவயோகம்தயாபரன்-நாகம்மா கோவிலடி,தங்கோடை,காரைநகர்.
* பேனார்ட் றீகன்- பரிசுத்த சூசையப்பர் கோவிலடி,அச்சுவேலி.
* ஆறுமுகம் சிவப்பிரகாசம்- மடத்தடி கிழக்கு ஒழுங்கை,சாவகச்சேரி வடக்கு.
* மகேந்திரன் குமஸ்தா-16,1ஆம். குறுக்குத்தெரு, மணியம் தோட்டம், கொழும்புத்துறை.
* சின்னத்தம்பி ஸ்ரீகாந்தன்- தொல்புரம் மேற்கு,சுழிபுரம்.
* மரியதாஸ் ரதி-13,1ஆம் குறுக்குத் தெரு,மணியம்தோட்டம்,கொழும்புத்துறை. (உ)

---

### சமாதான முயற்சி தொடர்பில்

# கருத்துக்கணிப்புக்கு உத்தரவிடும் அதிகாரம் ரணில் அரசுக்கு இல்லை

### மகிந்த பீரிஸ் மீது பாய்ச்சல்

(கொழும்பு)



ஒரு கருத்துக்கணிப்புக்கு உத்தரவிடுவதற்கு அரசாங்கத்திடம் அதகாரமில்லை.அதிகாரமற்ற நிலையில் இருந்து கொண்டுகருத்துக்கணிப்பு நடத்துவது பற்றி ஜீ.எல்.பீரிஸ் மீண்டும் மீண்டும் பேசி வருகிறார்.இது எனக்கு ஆச்சரியத்தை தருகிறது. இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஸ தெரிவித்துள்ளார்.

இது பற்றி மேலும் கருத்து வெளியிட்ட மகிந்த ராஜபக்ஸ,

அரசியல் சட்டப்படி ஜனாதிபதியோ அல்லதுமேல் நீதி மன்றமோ தான் கருத்துக்கணிப்பு ஒன்றிற்கு உத்தர விடமுடியும்.

இனப்பிரச்சினைக்கு எத்தகைய தர்வு கிட்டவிருக்கிறது என்பது எவருக்கும் தெரியாதநிலையே தற்போது உள்ளது. இந் நிலையில், கருத்துக் கணிப்பொன்றை ஆதரிக்க முடியாது.

இப்பொழுது ஒரு தேர்தல் அவசியம் என்று ஜனாதிபதி கருதவில்லை. உாய நேரம் வரும்போது,சூழநிலை எமக்கு சாதகமாக அமையும்போது தோதல்பற்றிஜனாதிபதிமுடிவுசெய்வார் என்று குறிப்பிட்டுள்ளார். (உ)

## பாதுகாப்புக் கடதாசி வாழைச்சேனையில் உற்பத்தி

(கொழும்பு)

இலங்கையின் காகித உற்பத்தி தொழில்நுட்ப வரலாற்றில் முதல் முறையாக வாழைச்சேனை காகித ஆலையில் கடந்த வாரம் பாதுகாப்புக்கடதாசி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இத்தகைய பாதுகாப்புக் கடதாசிகளை இலங்கை அரசு வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்தே பயன்படுத்தி வந்தன.

மேற்படிவாழைச்சேனை கடதாசித் தொழிற்சாலையில் பழைய இயந்திரசாதனங்களை கொண்டு இத்தகைய தரமான பெறுமதி மிக்க காகிதத்தை உற்பத்தி செய்தமை இங்குள்ள தொழில் நுட்பவியலாளர்களின் சாதனை என்றே குறிப்பிடலாம் (உ-10)

## உள்ளூராட்சித் தேர்தல் பிற்போடப்படலாம்

(கொழும்பு)

வடக்கு -கிழக்கு மாகாண உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிற் போடப்படும்சாத்தியம் உள்ளதாக பிரதித தேர்தல் ஆணையாளர் சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கில் எதிர்வரும்யூன் மாதம் உளளூராட்சித் தேர்தல் நடத்தஏற்பாடு செய்யப்பட்டுள் ளது.ஆனால்,ஏற்கனவேதாக்கல் செய்யப்பட்டிருந்தவேட்புமனுக்களை ரத்துச் செய்துபுதிதாக வேட்பு மனுத் தாக்கல் செய்யும் வகையில் அடுத்த மாதம்பாராளுமன்றில் சட்ட வரைபு ஒன்றைச் சமர்ப்பிக்க அரசு முடிவு எடுத்துள்ளது.

இதனால்,திட்டமிட்டதிகதிகளில் தேர்தலை நடத்தமுடியாதுள்ளது எனக் குறிப்பிட்ட ஆணையாளர் இவ்வாறு புதிய வேட்பு மனுத் தாககல் செய்வதனால் தேர்தல் திணைக்களத்துக்கு ஏற்படும் செலவுகளை திறைசேரியினூடாகவே பெறவேண்டும் எனவும் சுட்டிக் காட்டியுள்ளார். (உ-10)

### ஏழாண்டுகளின் பின்னர்

## மட்டு-கோட்டை ரயில் சேவை இன்று ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து மட்டக் களப்பு வரையிலான நேரடி ரயில் சேவை நாளை சனிக்கிழமை முதல் மீண்டும் ஆரம்பமாகவுள்ளது.

கடந்த 7 ஆண்டுகளாக கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து மட்டக்களப்புக்கான ரயில் சேவை தடைப்பட்டிருந்தது.

தற்போதைய சமாதான நடவடிக்கை காரணமாக இச் சேவை மீண்டும் ஆரம்பமாகவுள்ளது.

மட்டக்களப்புக்கும் வாழைச்சேனைக் கும் இடையிலான ரயில்ப்பாதை 157 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக் கது. (உ-8)

---

## தேசிய வருமான அதிகார சபை அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

தேசிய வருமான அதிகார சபையை அமைக்கும் யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சுங்கத் திணைக்களம்,வருமான வரித்திணைக்களம், கலால் திணைக்களம் என்பவற்றை ஒன்றிணைக்கும் வகையில் தேசிய வருமான அதிகார சபை அமைக்கப்படவுள்ளது.

இதேவேளை, இத் திணைக்களங்கள் மூலம் கிடைக்க வேண்டிய வருவாய் வருடம் தோறும் இழக்கப் பட்டுவருகிறது என பிரதி நிதி அமைச்சர் பந்துலகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

தேசியவருமான அதிகாரசபையை அமைப்பதன் மூலம் இத் திணைக் களங்களின் மொத்த வருவாய் திறைசேரிக்கு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாற்றம் தொடர்பாக சம்பந்தப் பட்ட திணைக்களங்களின் பணி யாளர்களுக்கு விளக்கமளிக்கப்படவுள்ளது. (உ-8)

### திட்டமிட்ட குற்றச் செயல்

## தடுப்பு நகல் பிரேரணை தற்காலிக இடை நிறுத்தம்

(கொழும்பு)

திட்டமிட்ட குற்றச் செயல்களைத் தடுப்பதற்கான நகல் பிரேரணையை தற்காலிகமாக இடை நிறுத்து வதற்கு அரசாங்கம் தீர்மானித் துள்ளது.

அரசசார்பற்ற நிறுவனங்கள்,ஏனைய தனியார் நிறுவனங்கள் மற்றும் அமைப்புக்கள் முன் வைத்த யோசனையை அடுத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந் நடவடிக்கையை எடுத்துள்ளார்.

திட்டமிட்ட குற்றச் செயல்களை தடுப்பதற்கான நகல் பிரேரணையை நதித்துறை, சட்டமனு சீராக்கல் அமைச்சு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருந் தமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## மேற்பார்வை அதிகாரிகளுக்கு 6 மாதங்களுக்கான கொடுப்பனவு

(கொழும்பு)

வடமாகாண நலன்புரி முகாம் களில் மேற்பார்வை அதிகாரிகளாக் கடமையாற்றி வருபவர்களின் 6மாதங்களுக்கான கொடுப்பனவு கள் மிக விரைவில் வழங்கப்படும் என விஞ்ஞான தொழில்நுட்ப மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

புத்தள மாவட்டத்திலும்,84 மீள் குடியேற்றக்கிராமங்களிலும்,63 நலன்புரி நிலையங்களிலும்,127 பேர் மேற்பார்வை அதிகாரிகளாக கடமையாற்றி வருகின்றனர்.

இவர்களுக்கான கொடுப்பனவுகள் தற்காலிகமாக இடை நிறுத்தப் பட்டிருந்தன.

இவ்விடயம் பிரதமரின் கவனத் துக்கு கொண்டுவரப்பட்டதை அடுத்து திறைசேரி இவ்வதிகாரிகளின் கொடுப்பனவுககான நிதியை ஒதுக்கியுள்ளது. (உ-8)

# PATRICIAN INSTITUTES

## பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்

தொழில் நுட்பப் பயிற்சி நெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன

**ஆரம்பம் 21-04-2003**

| | | |
|---|---|---|
| I.A. ADVANCE DIPLOMA IN COMPUTER PROGRAMMING | DURATION | 1 YEAR |
| B. DIPLOMA IN MICRO SOFT OFFICE | DURATION | 6 MONTHS |
| C. DIPLOMA IN TYPE SETTING | DURATION | 3 MONTHS |
| D. DIPLOMA IN COMPUTRISED ACCOUNTING | DURATION | 4 MONTHS |
| E. DIPLOMA IN DESK-TOP PUBLISHING | DURATION | 6 MONTHS |
| F. DIPLOMA IN ACCESS INCLUDING S.Q.L | DURATION | 3 MONTHS |

**II. CERTIFICATE COURSES:-**

| | | |
|---|---|---|
| i) M.S.WORD-2000 | vi) PASCAL | xi) d BASE FOR WINDOWS |
| ii) M.S.EXCEL-2000 | vii) d BASE N+ | xii) PRINT SHOP DELUXE |
| iii) M.S. ACCESS -2000 | viii) PAGE MAKER | xiii) ADOBE PHOTO SHOP |
| iv) M.S.POWER POINT | ix) WINDOWS 95 | |
| v) VISUAL BASIC VER 6.5 | x) COREL DRAW | |

EACH 3 MONTHS

| | |
|---|---|
| III. சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (ஆங்கிலம்) | காலம் 6 மாதங்கள் |
| IV. சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும்(தமிழ்) | காலம் 6 மாதங்கள் |
| V. மோட்டார் வாகனம் திருத்துதல் (petrolor Dieel வாகனங்கள்) | காலம் 6 மாதங்கள் |
| VI. ஜெனரல் எலக்ரிஷன் (மின்சார இணைப்பு, மோட்டார் றிவைண்டிங்) | காலம் 6 மாதங்கள் |
| VII. வானொலி, தொலைக்காட்சிப் பெட்டி திருத்துதல் | காலம் 8 மாதங்கள் |
| VIII. கடைச்சல் இயந்திர தொழிற்பயிற்சி (ON THE JOB TRAINING வழங்கப்படும்) | காலம் 3 மாதங்கள் |
| IX. மின் ஒட்டுநர் பயிற்சி (ON THE JOB TRAININGவழங்கப்படும்) | காலம் 3 மாதங்கள் |
| X. மரவேலை (with use of machinery) (ON THE JOB TRAININGவழங்கப்படும்) | காலம் 6 மாதங்கள் |
| XI. குளிர்சாதனப் பெட்டி திருத்துதல் | காலம் 6 மாதங்கள் |

*(குறிப்பு:* பாடசாலை மாணவர்களின் வசதி கருதி மாலை நேர வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன என்பதனை அனைவருக்கும் அறியத்தருகின்றோம்)

எமது நிறுவனத்தில் கணனிகள், வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகளில் ஏற்படும் எல்லாவித பழுதுகளும் திருத்தம் செய்து கொடுக்கப்படும்.

Note:- 1. பயிற்சிக் கட்டணங்களை தவணை முறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் போதிய ஆதாரம் காட்டி பங்குக் குருவானவரின் (Parish priest) சிபார்சின் பெயரில் பயிற்சிக் கட்டணத்தில் சலுகையைப் பெற்றுக் கொள்ளலாம்.
3. எமது நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அடையாள அட்டை வழங்கப்படும்..
4. பயிற்சிகள் சம்பந்தமான சகல விபரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

## PRODUCTION AND REPAIRING ON ORDER---!

### கட்டமைத்தலும் திருத்துதலும்

சகலவிதமான இரும்பு சார் உற்பத்திப் பொருட்களும் ஒட்டு வேலைகளும், மரத்தளபாடங்களும் உறுதியான தொழில்சார் அறிவு மூலமும் ஓடருக்கு மிக விரைவாகவும் திறமை யாகவும் செய்து கொடுக்கப்படும்.

## வாகன உரிமையாளருக்கான அறிவித்தல்

### வாகன தகுதிச் சான்றிதழ்-2003

### FITNESS CERTIFICATE FOR MOTOR VEHICLE

2003ம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச் சான்றிதழ் எமது நிறுவனத்தினால் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதனை அறியத்தருகின்றோம். ஏற்கனவே வாகனங்களை பரிசோதித்து சான்றிதழ் பெறாதவர்கள் உடன் எம்முடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளவும். அத்துடன் மோட்டார் சைக்கிளுக்கான ENGINE NO பொறித்துக் கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:

REGISRAR ,
PATRICIAN INSTITUTES,
59, ST. PATRICKS ROAD
JAFFNA.

(C/5981)


# செய்தித் துளிகள்

## மேதினக் கலந்துரையாடல

(யாழ்ப்பாணம்)

2003 அனைத்துலக மேதின நிகழ்வு சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று நாளை மு.ப 10 மணிக்கு யாழ். நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்துப் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச,அரச சார்பற்ற, கல்வி, வர்த்தக, போக்குவரத்து, கூட்டுறவு, சனசமூக நிலையங்கள், விளையாட்டுக்கழகங்கள், மதஅமைப்புக்கள், மாதர் மன்றங்கள், தொழிற்சங்கங்கள் என்பவற்றின் பிரதிநிதிகளைத் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (உ)

## மயக்க மருந்தேற்றும் பணி ஸ்தம்பிதம்

(நெல்லியடி)

மந்திகை மருத்துவமனையில் கடமையாற்றி வந்த எம்.எஸ்.எவ். இன் மயக்க மருந்தேற்றும் மருத்துவர் தனது பணிக்காலம் பூர்த்தியடைந்ததை அடுத்து சொந்த நாடு திரும்பியுள்ளதால்,

மேற்படி மயக்க மருந்தேற்றும் பணி ஸ்தம்பிதமடைந்துள்ளது. (உ-44)

## பதிவுகளை மேற்கொள்க!

(கல்வயல்)

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/305 கல்வயல் கிராம உத்தியோகத்தர் பிரிவில் மீளக்குடியேறி இதுவரை பதிவுகளை மேற்கொள்ளாதோர் தமது தேசிய அடையாள அட்டை, பங்கீட்டு உலர் உணவுஅட்டை, கணக்கு ஆரம்பிக்கப்பட்ட வங்கிப் புத்தகம் என்பவற்றுடன் மேற்படி பிரிவிற்கான கிராம உத்தியோகத்தர் அலுவலகத்திற்கு சென்று உடன் பதிவுகளை மெற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-111)

## ஈ.பி.டி.பியின் துண்டுப்பிரசுரங்கள் தீயிட்டெரிப்பு

(யாழ்ப்பாணம்)

சங்கானையில் ஈ.பி.டி.பியினரால் விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் பொது மக்களால் பறிமுதல் செய்யப்பட்டு எரிக்கப்பட்டுள்ளதுடன், கடந்த செவ்வாய்க்கிழமை சங்கானை நகரப்பகுதியில் ஈ.பி.டி.பியினரால் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

இதன்னை அவதானித்த அப்பகுதியில் நின்ற நூற்றிற்கும் மேற்பட்ட பொது மக்கள் ஈ.பி.டி.பியினருக்கு எதிரான கோசங்களை எழுப்பியவாறு துண்டுப் பிரசுரங்களை பறித்தெடுத்து மூட்டினர்.

துண்டுப்பிரசுரங்களை விநியோகித்த ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் பின்னர் சங்கானைப் பொலிஸாரின் உதவியை நாடினர். (உ-5)

## கட்டண வேறுபாடு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறையில் இருந்து யாழ்ப்பாணம் வரும் மினிபஸ்களில் பிரயாணிகளின் பொதிகளுக்கு அதிகமான கட்டணம் அறவிடப்படுவதாக பொது மக்களால் புகார் தெரிவிக்கப்படுகிறது.

பொதி ஒன்றுக்கு இருபது ரூபா முதல் முப்பது ரூபா வரை அறவிடப்படுவதாகவும்,இத்தொகை மினிபஸ்சுக்கு மினிபஸ் வேறுபடுவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. (உ-75)

## தாச்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உடுவில் அண்ணா விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்தி வரும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று பி.ப 4.45 மணிக்கு அண்ணா விளையாட்டுக்கழக மைதானத்தில், நவாலி தென்றல் விளையாட்டுக் கழகமும் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக் கழகமும் விளையாடவுள்ளன. (உ-10)

## "வான்முழக்கம்" சிறப்பிதழ் வெளியீடு

(திருநெல்வேலி)

"வான்முழக்கம்" சஞ்சிகையின் முதலாம் ஆண்டு சிறப்பிதழ் வெளியீட்டு விழாவும் பரிசளிப்பு வைபவமும் இன்று மு.ப. 11 மணிக்கு சுவதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

ஐ.சச்சிதானந்தம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

நூல் அறிமுகவுரையை "வான்முழக்கம்" பிரதம ஆசிரியர் வே. தவச்செல்வனும், நூல ஆய்வுரையை யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் சி.வி.கே. சிவஞானமும் நிகழ்த்தவுள்ளனர்.

நிகழ்வில், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.கே. சிவாஜிலிங்கம், என்.ரவிராஜ், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அ.விநாயகமூர்த்தி, மாவை சேனாதிராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(உ-43)

## நூல்கள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் ஆரம்பக்கல்வி அபிவிருத்திப் பிரிவினர் யுனிசெவ் அனுசரணையுடன் வெளியிட்ட எளிய பரிசோதனைகள், சூழலை அறிவோம், சுந்தரக்கதைகள் எழுத்தாக்கத்திறனை விருத்தி செய்வதற்கான செயல்நூல் ஆகிய நூல்கள் வலயக்கல்விப் பணிப்பாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

வடக்கு-கிழக்கில் உள்ள சகல பாடசாலைகளுக்கும் இந்நூல்கள் அனுப்பப்பட்டு அனைத்து மாணவர்களும் பயன்பெற வழி செய்யப்பட்டுள்ளது. (உ-10)

## மின்விளக்குகள் பொருத்தக் கோரிக்கை

(சுதுமலை)

மானிப்பாய் நகரசபைப் பகுதிக்குள் இரவு நேர மின்விளக்குகளை அமைத்துத் தருமாறு வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் செயலாளர் பி.விக்ரர், இலங்கை மின்சார சபைக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இப்பகுதியில் வீதி விளக்குகள் பொருத்தப்படாமையால் விபத்துக்கள் அடிக்கடி நடைபெற்று வருவதாகவும் திருடர்களுக்கும் இந்நிலை சாதகமாக அமைந்துள்ளதாகவும் பொது மக்கள் பலர் பிரதேச சபைக்கு முறைப்பாடு செய்துள்ளதாகவும்,

மிகவிரைவில் இதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறும் பிரதேச சபையின் செயலாளர் அக் கடிதத்தில் தெரிவித்துள்ளார். (உ-252)

## தொழிற் பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட இளைஞர்,யுவதிகளுக்கு கட்டுமானம், பன்ன வேலை, ஒட்டுனர், கணனி ஆகிய பயிற்சிகள் வழங்குவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கட்டுமானம், பன்னவேலை, ஒட்டுநர் ஆகிய பயிற்சி நெறிகளுக்கு ஆண்டு-8ற்கு மேல் சித்தியடைந்தவர்களும், கணனிப்பயிற்சி நெறிக்கு க.பொ.த. சாதாரணப் பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தியுடன் வறுமைக்கோட்டின் கீழ் உள்ளவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பங்களை யாழ். பிரதேச செயலகத்திற்கு எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கட்டுமானம், ஒட்டுநர், பன்னவேலை பயிற்சி நெறிகளுக்கு ஊக்கவிப்புத் தொகை வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

# பக்தாத்தில் எஞ்சியுள்ள பகுதிகளையும் கைப்பற்ற கூட்டுப்படை தீவிர முயற்சி

## ஈராக்கியதலைவர்களுடன் அமெரிக்கா இடைக்கால அரசு பற்றிப்பேசதீர்மானம்

(பக்தாத்)

**பக்தாத் நகரத்தில் கைப்பற்றியுள்ள பகுதிகளை தக்கவைத்துக் கொள்ள கூட்டணிப் படைகள் துரித நடவடிக்கைகளில் இறங்கியுள்ள அதேசமயம் எஞ்சியுள்ள பகுதிகளையும் தம் வசம் கொண்டுவருவதற்காக தீவிர இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன.**

**அப்பகுதிகளில் கடந்த இரவு முழுவதும் விமானக் குண்டுவீச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்றுவந்தன.**

**கிழக்கு தென் பகுதியில் ஈரானுக்கு அருகிலுள்ள ஈராக்கிய தலைமையகம் நேற்று எதிர்ப்புக்கள் எதுவும் இன்றியே தம்வசம் வந்ததாக அமெரிக்கப் படைகள் கூறின.**

மத்திய ஈராக்கில் பல நகரங்கள் இன்னமும் தம் வசம் வரவில்லை என்பதை அமெரிக்கக் கூட்டுப்படையினர் ஒப்புக் கொண்டுள்ளனர்.

தென்பகுதியிலுள்ள பஸ்ரா நகரம் பிரிட்ஷ் படைகளால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளன. இங்கு சட்ட ஒழுங்கை நிலை நாட்ட வேண்டியிருப்பதாகவும், போராடிவரும் ஈராக்கிய குழுக்களை அகற்ற வேண்டியிருப்பதாகவும் பிரிட்டிஷ் அதிகாரிகள் கூறியுள்ளனர்.

ஈராக்கில் இடைக்கால அரசு ஒன்றை நிறுவுவது குறித்து ஆராய்வதற்காக விரைவில் நாடுகடந்து வாழும் ஈராக்கிய தலைவர்களையும் கொண்ட முதல் கட்ட ஆலோசனைக் கூட்டமொன்று நடத்தப் போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

இவ்விதக் கூட்டங்கள் பல நடத்தப்படவிருப்பதாகவும் இறுதிக் கூட்டம் பக்தாத்தில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கின் மறு சீரமைப்புப் பணியிலும், ஜனநாயக கட்டமைப்பு உருவாக்கலிலும் ஐரோப்பிய யூனியன் முக்கிய பங்கு வகிக்க வேண்டும் என்று ஐரோப்பிய யூனியன் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### சதாம் பற்றிய வதந்திகள்

ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசைன் பற்றி பல வதந்திகள் நிலவுகின்றன.

அவர் உயிருடன் இருப்பதாகவும் அமெரிக்கத் தாக்குதலில் காயமுற்றுள்ளதாகவும், கொல்லப்பட்டு விட்டதாகவும், சிரியாவிற்கு தப்பிச் சென்றுள்ளதாகவும், பக்தாத்திலுள்ள ரஷ்யத் தூதரகத்தில் ஒழிந்திருப்பதாகவும் வதந்திகள் கூறுகின்றன.

இந்த வதந்திகளில் ஏதாவது ஒன்றுதான் உண்மையாக இருக்க முடியும் என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

பக்தாத்தில் உள்ள ரஷ்யத் தூதரகத்தில் சதாம் ஹுசைன் ஒழிந்திருப்பதாகக் கூறுவதில் எந்த உண்மையும் இல்லையென்று ரஷ்யா கூறியுள்ளது.

இதேவேளை, சதாம் ஹுசைன் சிரியாவிற்கு தப்பிச் சென்றுள்ளதாகக் கூறப்படும் வதந்திகளை அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பெல் மறுத்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்க விமானத் தாக்குதலில் சதாமும் அவரது மகன்மாரும் கொல்லப்பட்டதாகக் கூறுவதற்கு எந்தச் சான்றும் இதுவரை கிடைக்கவில்லை என்று ஈராக்கிய தேசிய காங்கிரஸ் என்ற எதிர்க்கட்சியின் தலைவர் அகமட் சலாபி கூறியுள்ளார்.

பக்தாத்தின் மன்சூர் மாவட்டத்தில் சதாம் ஹுசைனும் அவரது மகன்மாரும் இருந்த கட்டடத்தின் மீது அமெரிக்க விமானம் ஒன்று தலா 2000 இறாத்தல் எடை கொண்ட 4 குண்டுகளைப் போட்டதும் அக்கட்டடம் சேதமுற்ற போதும் சதாமுக்கும் அவரது மகனுக்கும் என்ன நேர்ந்தது என்பது தெரியவில்லை என்பதும் முன்னர் வெளியாகியிருந்த செய்திகள். (பி-9)

## இராணிமேரிக் கல்லூரியை உடன் திறக்க உத்தரவு

(சென்னை)

சென்னை இராணிமேரிக் கல்லூரியை உடனடியாகத் திறக்க வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றம் தமிழக அரசிற்கு நேற்று உத்தரவிட்டது.

மாணவிகள் கல்லூரிக்கு வரவேண்டும் என்றும் ஆசிரியர்கள் வகுப்புக்களை நடத்தவேண்டும் என்றும் பணித்துள்ளது. நீதிபதிகள் தங்கள் உத்தரவுகள் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை நேற்று பிற்பகலுக்குள் தெரிவிக்குமாறும் மாணவிகள் உடனடியாகக் கல்லூரிக்குள் வராவிட்டால் கல்லூரி இடிப்பதற்காக விதிக்கப்பட்ட தடையை நீதிமன்றம் உடனடியாக விலக்கிக் கொள்ளும் என்றும் அரசு தலைமை வழக்கறிஞர் எம்.எஸ்.சந்திரனிடம் நீதிபதிகள் தெரிவித்தனர். (பி-9)

## சார்ஸ் நோயாளிகளால் ஹொங்கொங் வைத்தியர்கள் திணறல்

(ஹொங்கொங்)

ஹொங்கொங்கில் அதிகரித்து வரும் ஆட்கொல்லி சார்ஸ் நோயாளிகளை சமாளிக்க முடியாமல் வைத்தியர்களும் தாதிகளும் திணறி வருகின்றனர்.

அரசு மருத்துவமனைகளில் சார்ஸ் நோயாளிகளுக்கென்று ஒதுக்கப்பட்ட தனி வார்ட்டுகள் நிரம்பி வழிகின்றன. இதனால் முக்கிய அறுவைச் சிகிச்சைகள் தாமதமாகின்றன.

ஆசியாவிலேயே ஹொங்கொங் பொது சுகாதார மையங்கள் மிகவும் புகழ் பெற்றவை. இங்கு நவீன தொழில்நுட்ப வசதிகள் கையாளப்படுகின்றன.

அப்படி இருந்த போதும் சுவாசத்தை தாக்கி மரணத்தை ஏற்படுத்தக் கூடிய சார்ஸ் நோயாளிகள் வைத்தியர்களுக்கும், தாதிகளுக்கும் பெரும் சவாலாக உள்ளனர்.

தற்போதைய நிலைமை இக்கட்டாக இருப்பதாகவும் இன்னும் நிலைமை மிகவும் மோசமான கட்டத்தை அடையும் என்றும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. (பி)

## ஸ்டாலின் உட்பட பல தமிழ்நாடு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கைது

(சென்னை)

சென்னை இராணி மேரிக் கல்லூரியில் காவலாளியைத் தள்ளிவிட்டு அக்கல்லூரிக்குள் சட்டவிரோதமாக நுழைந்து மாணவிகள் மத்தியில் போராட்டத்தினைத் தூண்டி அமைதியைக் குழப்பிவிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் மு.க. ஸ்டாலின், யோ.அன்பழகன், க.பொன்முடி ஆகியோர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு சட்டசபையில் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா தெரிவித்திருக்கிறார்.

இராணிமேரிக் கல்லூரியின் முதல்வர் கொடுத்த புகாரின் அடிப்படையில் தான் இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் அமைதியாக்ப் படித்துக் கொண்டிருந்த மாணவிகளிடம் போராட்டத்தைத் தூண்டி அவர்கள் அமைதியைக் குலைத்துவிட்டதாகவும் முதல்வர் தெரிவித்தார். (பி-9)

# சதாம் ஆட்சி வீழ்த்தப்பட்டதையடுத்து வீதிகளில் மக்கள் கொண்டாட்டம்

(பக்தாத்)

சதாம் ஆட்சி கவிழ்க்கப்பட்டு விட்டது என்ற அறிவித்தல் வெளிவந்த சில நிமிடங்களில் ஈராக்கிய வீதிகளில் பொது மக்கள் கொண்டாட்டங்களில் ஈடுபடத் தொடங்கியுள்ளார்கள்.

பக்தாத்தின் முக்கிய சந்திகளில் அமெரிக்க டாங்கிப் படையினர் நிலைகொண்டுள்ளனர்.

"மக்கள் ஆசுவாசமாக மூச்சுவிடுகிறார்கள்- சரித்திர முக்கியத்துவமான சம்பவம்" என்று மக்கள் கொண்டாட்டத்தை அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் டொனால்ட் ரம்ஸ்பீல்ட் கூறியிருக்கிறார்.

ஈராக்கின் ஒரு பகுதி தான் மீட்கப்பட்டுள்ளது. இன்னும் ஒரு பகுதி மீட்கப்படவிருக்கின்றது என்று அவர் கூறினார்.

பக்தாத்தில் அமைக்கப்பட்டிருந்த சதாம் ஹுசைனின் மிகப் பெரிய வெண்கலச் சிலையொன்று வீழ்த்தப்படுவது உலகமெங்கும் தொலைக்காட்சியில் காட்டப்பட்டது.

பார்டஸ் சதுக்கத்தில் ஹோட்டல் ஒன்றுக்கு முன்னால் நிறுவப்பட்டிருந்த சதாமின் பாரிய சிலையை மக்கள் கயிறு கட்டியும் சங்கிலிகள் கட்டியும் தகர்த்தும் உடைத்துத் தள்ளுவதற்கு முயற்சி செய்தனர். அமெரிக்க வீரர் ஒருவர் ஏறி சிலையின் முகத்தை அமெரிக்கக் கொடியால் மறைத்தார். தொடர்ந்தும் அச்சிலையை வீழ்த்துவதற்கு மக்கள் திரண்டு முயற்சி செய்தனர். அதன் பேரில் அமெரிக்கப்படையினர் தமது கனரக வாகனங்களைப் பயன்படுத்தி சிலையை வீழ்த்த உதவினார்கள். சிலை நிலத்தில் வீழ்ந்ததும் அதன் மீது ஏறி மிதித்தும், துப்பியும் "சதாம் செத்தான்" என்று கத்தினார்கள்.

இதுவரை அமைதியாகவிருந்த பொதுமக்கள் வீதிகளில் இறங்கிக் கூட்டணிப் படைகளை வரவேற்றார்கள்.

இதற்குள் கொள்ளையடிப்பவர்கள் ஐ.நா.சபை அலுவலகம், ஒலிம்பிக் குழுவின் கட்டடங்களையும் சூறையாடினார்கள். 3 வார கால கடும் தாக்குதலுக்குப் பின் அமெரிக்கக் கூட்டணிப் படைகளின் பிடியில் ஈராக் தலைநகர் பக்தாத் வீழ்ந்தது!

கடந்த ஒருவார காலமாக கடும் போர் எதிர்ப்பை சந்தித்து வந்த அமெரிக்கக் கூட்டணிப்படைகள் எவ்வித எதிர்ப்பும் இன்றி தலைநகர் பக்தாத்திற்குள் நுழைந்தன. நேற்று முன்தினம் சதாம் சிட்டி என்று அழைக்கப்பட்ட பக்தாத் நகரம் அமெரிக்காவின் கட்டுப்பாட்டின் கீழ் வந்துள்ள மற்றொரு நகராகிவிட்டது என்று கட்டார் தலைநகர் டோஹாவில் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்கப்படைகளின் மத்திய கட்டளைத் தலைமையின் பேச்சாளர் பிரிகேடியர் ஜெனரல் வின்சன்ட் புரூக்ஸ் கூறியுள்ளார்.

அமெரிக்க இராணுவத்தின் இரண்டாவது படைப்பிரிவு பக்தாத் நகரின் மையப் பகுதிக்குள் நுழைந்து முகாமிட்டுள்ளது. சதாம் அரசின் மத்திய நிர்வாக அலுவலகம் இப்பொழுது அமெரிக்கப் படைகளின் முகாமாக மாறிவிட்டது.

பக்தாத் நகரிலிருந்த சதாமின் சிலையை வீழ்த்தி மக்கள் கொண்டாடினார்கள். அமெரிக்க இராணுவத்தின் மூன்றாது படையணி பக்தாத் நகரின் வடபகுதியில் இருந்து தெற்குப் பகுதியை நோக்கி நேற்று முன்னேறிக் கொண்டிருந்தது.

முதல் படையணி பக்தாத்தின் தெற்குப்பகுதியில் இருந்து நகருக்குள் நுழைந்து கொண்டிருந்தது. அமெரிக்கக் கடற்படையின் 15 ஆயிரம் வீரர்கள் கொண்டமற்றொரு படைப்பிரிவு கிழக்கில் இருந்து பக்தாத் நகருக்குள் நுழைந்துள்ளது.

பக்தாத் நகருக்குள் ஆங்காங்கு வெளிப்படும் எதிர்ப்புக்களை அமெரிக்க இராணுவத்தின் சிறப்பு நடவடிக்கைப் பிரிவு எதிர்த்தாக்குதல் நடாத்தி சமாளித்து வருகின்றது.

பக்தாத்தை தாங்கள் எதிர்பார்த்ததை விட சுலபமாகப் பிடித்துவிட்டதாக கூறியுள்ள பென்ரகன் பேச்சாளர் மேஜர் ஜெனரல் ஸ்டான்லி மெக்கிறிஸ்டல், ஈராக் முழுவதும் கூட்டணிப் படைகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளதாகவும் எவ்வித எதிர்ப்புமின்றி கூட்டணிப்படைகளின் போர் விமானங்கள் ஈராக்கின் வான்பகுதியை தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளன என்றும் கூறினார்.

பக்தாத்தில் தங்களுடைய பிடியை பலப்படுத்த பல்லாயிரக்கணக்கில் தனது படைகளை கொண்டு வந்து இறக்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

### பக்தாத் கொள்ளை!

சதாம் ஹுசைனின் ஆட்சி இல்லையென்பது உறுதியானதைத் தொடர்ந்து பக்தாத் நகரில் உள்ள கடைகளில் புகுந்து தங்கள் கைகளுக்குக் கிடைத்ததையெல்லாம் அந்நகர மக்களில் சிலர் அள்ளிச் செல்கின்றனர். கட்டுப்பாடு எதுவுமற்ற நகராக பக்தாத் ஆகியுள்ளது. சதாமின் மாளிகை ஒன்றில் இருந்த பொருட்களும் கொள்ளையடிக்கப்பட்டு வருகின்றன.

ஈராக் அரசு அலுவலகங்களில் இருந்த மேசை, நாற்காலிகள், மின் விசிறிகள், குளிர்சாதனப் பெட்டிகள் என்று வைப்பதற்கு எதுவுமின்றி அனைத்தையும் அம்மக்கள் அள்ளிக் கொண்டு செல்வதை அமெரிக்கப் படையினர் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இது தொலைக்காட்சியிலும் காட்டப்பட்டது.

### ஷியாக்கள் கொண்டாட்டம்

சதாம் ஹுசைனின் மூத்த மகனான உதய் ஹுசைனுக்குச் சொந்தமான ஒலிம்பிக் கமிட்டிக் கட்டடத்தை ஷியா பிரிவு முஸ்லிம்கள் தீ வைத்து கொளுத்தினர். பக்தாத் நகரின் கிழக்குப் பகுதியில் மிக அதிகமாக வசித்துவரும் ஷியா முஸ்லிம்கள் சதாம் ஹுசைனின் வீழ்ச்சியை கொண்டாடி வருவதாக செய்திகள் கூறுகின்றன. (பி)

## யு.எஸ். விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது

(பக்தாத்)

ஈராக்கில் சதாம் ஹுசைனினது சொந்த நகரமான டிக்ஹிரி அருகில் அமெரிக்கப் போர்விமானம் ஒன்று ஈராக்கியப் படையினரால் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது.

அதில் இருந்த இரண்டு படையினரும் காணாமல் போய்விட்டதாக அமெரிக்கப்படைத்துறை தலைமையகமாகிய பென்ரகன் தெரிவித்துள்



உலக தரிசனம்

## இந்தியாவை விட பாக். ஏவுகணை சக்திகூடியதாம்

(இஸ்லாமாபாத்)

இந்திய ஏவுகணைகளைக் காட்டிலும் பாகிஸ்தான் ஏவுகணைகள் நவீன தொழில்நுட்பங்களைக் கொண்டவைகள் என்று பாகிஸ்தான் வெளியுறவு மந்திரி தெரிவித்துள்ளார். மேலும் அவர் இந்தியா நமது நாட்டை காட்டிலும் ஏவுகணைத் தொழில்நுட்பத்தில் பின்தங்கியிருக்கிறது. அதன் காரணமாகத் தான் அடிக்கடி ஏவுகணை சோதனை நடத்திக் கொள்கிறது. அதற்காக நாம் ஏவுகணைச் சோதனை நடத்துவது தேவையில்லாதது. நம்மிடம் ஏவுகணை சோதனைத் திட்டமொன்று உள்ளது. அது எப்பொழுது தேவைப்படுமோ அப்பொழுது நடத்துவோம் என்றும் அவர் கூறியதாக நேற்று முன்தினம் இரவு செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது. (பி)

# தவித்த முயலடிப்போர்

வெள்ளி முற்றம்

அதிகாலைப் பொழுதின் அமைதியைக கலைப்பது போல் அந்தச் செய்தி புயலைக் கிளப்பிவிட்டிருந்தது. தேர்தலுக்குப் பிறகு யுத்த நிறுத்தத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தமும் கைச்சாத்தானது. இந்த ஒரு வருட கால இடைவெளியில குண்டுச் சத்தமும் இல்லை. உயிர் இழப்புக்களும் இல்லை. வடக்கு கிழககு மாகாண மக்கள் ஹெலி, புக்காரா விமானங்களுக்கோ, பயந்து ஓடி ஒழியவும் இல்லை. இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்ந்து நாட்டில நிரந்தர சமாதானம் நிலவ வேண்டும் என்றே சமாதானத்தை விரும்பும் மக்கள் ஏங்குகின்றனர்.

ஆழ்ந்த தியானத்தில் இருந்து இப்போதுதான் பொன்னம்பலத்தார் மீண்டிருந்தார். அவர் தியானத்தில அவ்வளவு நம்பிக்கை கொண்டவரல்ல. ஆனால் மனச்சாந்தியை என்று தொலைத்தாரே அன்றிலிருந்து இந்தத் தியானந்தான் அவருக்கு நிம்மதியை இப்போது அளித்துக் கொண்ருக்கிறது. தியானத்தை முடித்துக் கொண்டு மனதைத் தன்வயப் படுத்தித் தனது மௌனத்தைக் கலைத்து வெளியில் வந்தார். வீதியில சனங்களின் ஆரவாரம் அவரது கவனத்தை ஈர்த்தது. காது கொடுத்துக கேட்டார்.

"இந்த நாசமாப் போனவங்களால தானே நாடே குட்டிச் சுவராய்ப் போனது. அகதி வாழ்க்கை எங்கட சொந்தமாய் போச்சுது. இன்னும் இவங்களுக்குப் புத்தி வரல்லயா"?

அபிராமி ஆச்சி தொண்டை கிழியச் சத்தமிட்டாள். அவளது ஆத்திரம் நியாயமானதுதான். சனங்கள் கூட்டங் கூட்டமாய்க் கூடிநின்றனர். தம்பலகாமம் பழம் பெரும் கிராமம். அந்தக் கிராமத்தின் ஒரு பகுதிதான் புதுக்குடியிருப்பு. புதுக்குடியிருப்புத் தெருவெங்கும் சனக்கூட்டம். பொன்னம்பலத்தார் வீடும் புதுக்குடியிருப்பில்தான் இருந்தது. மாளிகை போன்ற அவரது வீட்டில் நித்தமும் சனம் நிறைந்து வழியும்... அவரது கட்டளைக்காக எவ்வளவு பேர் காத்திருந்தனர். அரச உத்தியோகத்தில் இருந்தவர். ஆனால் இன்று எல்லாம் பாழாய்ப் பழங்கதையாயப் போய்விட்டது. அந்த வீடும் அழிக்கப பட்டு விட்டது. அதுதன் சோபையை இழநது விட்டது. ஒரு குடிசையைப போட்டுக் கொண்டு குந்தி இருக்கிறார். பயங்கரவாதக் கட்டவீழ்ப்பினால் எல்லாவற்றையுமே இழந்து விட்டார். அவரைப் பொறுத்தவரைக்கும் உலகமே இருண்டு விட்டது. வீடடுக்கு விளக்கேற்றிய மனைவி மாணிக்கமும் போய்ச சேர்ந்துவிட்டாள். ஒண்டிக் கட்டையான அவருக்கு வாழ்க்கை வெறுத்து விட்டது. ஒரே மகளின் அன்புப் பார்வை ஒன்றுக்காகவே உயிர்ப்பெய்து கிடக்கிறார்.

மெண்டிஸ் சைக்கிளில் சவாரி வந்தான். அப்துல்லாவும் மரக்கறி விற்பதற்காகச் சைக்கிளில் வந்தான். இருவரும் பொன்னம்பலத்தாரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள். குடும்பத்தவர்களோடு பொன்னம்பலத்தார் வீட்டுக்கு எத்தனைமுறை வந்திருப்பார்கள். அவரது மனைவியின் மரணச் சடங்கில் கலந்து கொண்டு ஆறுதல் கூறியிருப்பார்கள். புதுக்குடியிருப்பு வரும்போதெல்லாம் அவரைச் சந்திக்காமல் செல்வதில்லை. இருவரையும் கண்டு கொண்ட பொன்னம்பலத்தார் படலையைத் திறந்து கொண்டு வந்தார். மெண்டிஸ் சைக்கிளை விட்டுக் கீழே இறங்கினான்.

"மெண்டிஸ்! என்ன தெருவெல்லாம் சனமாயிருக்கு... ஏதும் பிரச்சினையா"

தெருவைப் பார்த்தவாறே கேட்டார்.

"என்ன பிரச்சினை... வேலை வெட்டி இல்லாத ஜென்மங்கள்... இவங்கள என்ன செய்வது. நிம்மதியா மக்களை இருக்க விடமாட்டாங்க"

மெண்டிஸ் அலுப்போடு பதில் சொன்னான். அப்துல்லா விளக்கமாகக் கூறினான்.

"ஐயா புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு எதிராக வாகனத் தொடரணி திருகோணமலையில் இருந்து கொழும்புக்குச் செல்லப் போகுதாம். இப்ப இடையில் வந்து கொண்டிருக்கும்"

பொன்னம்பலத்தார் உசாரானார்.

"என்ன தொடரணியோ எதால போகுதாம்"

"இந்தக் கண்டி றோட்டாலதானே போகும்"


அவ்வளவுதான். பொன்னம்பலத்தாருக்குக் கண்கள் சிவந்தன. அவரது உதடுகள் துடித்தன. நெஞ்சுபடபடத்தது. சற்று நேரம் ஆடிப்போய் விட்டார். பட்டவர்களுக்குத்தான் அதன் தாக்கம் புரியும். அவர் போரின் கொடுமையை அனுபவித்தவர். அதனால் பெரிதும் பாதிக்கப் பட்டவர்.

"எவன்ரா அவன் கண்டனப் பேரணி நடத்துறவன். பார்க்கிறன் ஒரு கை"

சடடென்று வீட்டுக்குள் புகுந்தார். கையிலே ஒரு கத்தியோடு வெளியில் வந்தார். அவரைப் பார்க்கவே பயமாக இருந்தது. முகம விகாரமடைந்து உடல் கொதித் தது. படலைக்கு ஒரு உதை விழுந் தது. படலை பிரிந்து சரிந்து விழுந்தது. வெளியில் பாய்ந்து வந்தார். புதுக்குடியிருப்புச் சந்தியை நோக்கி விரைந்தார்.

"ஐயா... ஐயா கொஞ்சம் நில்லுங்க..."

மெண்டிஸ் சத்தமிட்டான். பலர் அவரைப் பின் தொடர்ந்து ஓடினர். அவருக்குப் பின்னால் பெருங்கூட்டம் திரண்டு ஓடியது. சைக்கிள்களை அப்படியே போட்டு விடடு மெண்டிஸோடு அப்துல்லாவும் ஓடினான். பொன்னம்பலத்தார் சந்திக்கு வந்துவிட்டார். அது கண்டி வீதியைத் தம்பலகாமத்தில இருந்து வரும் வீதி சந்திக்கும்




இடம். அந்த இடத்தைப் பதின்மூன்றாம கட்டைச் சந்தி என்றுதான் இன்னமும் சொல்வார்கள். சந்தியில் பெரிய கூட்டம் நின்றது. பொன்னம்பலத்தாரோடு பேசுவதற்கு யாருககும் தைரியம் வரவில்லை.

மெண்டிஸ் பொன்னம்பலத்தார் பக்கத்தில் நின்றான். அப்துல்லாவும வந்து விட்டான்.

"ஐயா என்னையா நீங்கள் அவங்கதான் அப்படி என்றால் நீங்களுமா"?

மெண்டிஸ் குழைந்தான். அவரது பார்வை அவனைப் பொசுக்குவது போல் இருந்தது. அப்துல்லாவும் சேர்ந்து கொண்டான்.

"ஐயா நாங்க பொறுமையாக இருக்கவேண்டிய காலம் இது யோசித்துப் பாருங்க"

அப்துல்லாவைத் திரும்பி ஒரு பார்வை பார்த்தார். அந்தப் பார்வையை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அவரது உள்ளக் குமுறலை நன்கு தெரிந்தவன்.

"எதைப் பொறுப்பது, எதை யோசிப்பது? என்ர பிள்ளையைப் பறிகொடுத்தேனே! அதைப்பொறுப்பதா? இவங்கட அட்டகாசத்தைப் பார்த்தும் பொறுமையாக இருக்கிறேனே அதை யோசிப்பதா? இருக்கிற ஒரே உயிர்... நல்ல காரியத்துக்கு அதுவும் போகட்டும்..."

ஆவேசத்தோடு பேசினார். அனுபவ பட்டவாகளுக்குத்தான் அதன் தாற்பரியம் தெரியும்... உணர்ச்சி வசப்பட்டு அழத்தொடங்கிவிட்டார். அவருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

"டேய் மெண்டிஸ்! உனக்குத் தெரியாததாடா... பேச்சு வார்த்தை என்று ஏமாந்துபோனோமே அப்ப என்ன நடந்தது? ஊர்மனைகள் அழிந்தன. அகதிகளாகி எங்கெல்லாமோ அலைந்தோம்.. எல்லாத்தையும் தொலைத்து விட்டோம். எத்தனை இளைஞர்களைப் பலி கொடுத்து விட்டோம் இந்த முறையும் தவறினால் அந்த அழிவை யாராலும் தடுக்க முடியாது. இவங்க தங்களது பிள்ளைகளையும் போர் முனைக்கு அனுப் பட்டும். அவங்களும் போகட்டும். போவாங்களா? செய்ய மாட்டாங்கள். அப்பாவிக் கிராமத்து ஏழைகளின்ர பிள்ளைகளைப் பலிக்கடாக்களாக்கி உல்லாசமாக வாழ் வாங்க. சுயநலத்துக்காக இனவீதத்தைக் கிளப்பி விட்டு வேடிக்கை பார்க்க எதையும் செய்வாங்க. இவங்க செய்யிறதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருக்கிறதா? பொது மக்கள்தான் இவங்களைத் தட்டிக் கேட்கணும்"

அவரின் உள்ளக்சு அடியில் இருந்து சொற்கள் பாய்ந்து வந்தன. அவரது கண்களில் இருந்து தாரை தாரையாகக் கண்ணீர் ஊற்றெடுத்து வடிந்தது. மெண்டிஸ் யோசித்தான். பொனனம்பலத்தாரின் மனவேதனையையும் எண்ணிப் பார்த்தான். அவன் மனதில் அந்த நிகழ்வு இறுகிக கனதததது. அன்று அவனும் பொன்னம்பலத்தாரோடு இருந்தான்.

பொன்னம்பலத்தாரின் ஒரே மகன் அருட்செல்வம். பெயருக்கேற்ற பிள்ளை. எந்த நேரமும்சிரித்த முகம் படிப்பிலும் கெட்டிக்காரன். உயர்தரப்பரீட்சைஎடுத்து விட்டு வீட்டுக்கு வந்திருந்தான். அந்தக் கொடிய போர்க் காலம் தமிழ்க் கிராமங்களை அழித்துக் கொண்டிருந்தது. தம்பலகாமம் மட்டுமல்ல திருகோணமலையின தமிழ் கிராமங்கள் அனைத்தும் பயத்தில் மூழ்கிக் கிடந்தன. இளைஞர்கள் இரவு நேரங்களைக் காடுகளில் கழித்தனர். பகலில் வீட்டுக்கு வந்தாலும் சுற்றி வளைப்புக்களால் வதைக்கு உள்ளானார்கள். அன்றும் அப்படித்தான். கோழிகள் கூவின. மெல்ல இருள் கலையத் தொடங்கி இருந்தது. அருட்செல்வம் நேரத்தோடு விழித்துக கொண்டான். அவனுக்கு வயலைப போய்ப் பார்த்து வரவேண்டும் போல் இருந்தது. முதல்நாளே பார்த்திபனோடு பேசி வைத்திருந்தான். விடிந்ததும சைக்கிளைத் தள்ளிக் கொண்டு புறப்பட்டான் பொன்னம்பலத்தார் கண்டுவிட்டார்.

"தம்பி எங்க புறப்படுறாய், இன்னும நல்லா விடியல்ல"

"அப்பா நான் வயலைப் பார்த்துத தணணியைக் கட்டி விட்டு வாறன். வயலைப் பார்க்க ஆசையாகக் கிடக்கு. பார்திபனும் என்னோட வாறான். எட்டு மணிக்கு முதல் வந்திடுவன்"

பொன்னம்பலத்தாரின் வயல் வீட்டில் இருந்து சற்றுத் தூரத்தில் இருந்தது. அவருக்கு மகனை அனுப்ப மனமில்லைத்தான். அவனைத் தடுத்து நிறுத்தவும் முடியாது. அவரது மனம் கலங்கியது. என்ன செய்வதென்று தெரியாது தடுமாறினார். அம்மா கொடுத்த தேநீரைக் குடித்தான். அவனின் செயல்களை மனதார ஏற்று ரசிப்பவர். அவனது செயல்கள் புத்திசாலித்தனமானவை. அவனது எதிர்காலம் பிரகாசிக்கும் என்று இறுமாந்து இருப்பவர். மகனின் முகத்தைப் பார்த்தார். அவனுக்கே உரித்தான அந்தச் சிரிப்பை உதிர்த்து விட்டான். பொன்னம்பலத்தார் கிறங்கிப் போனார்.

"தம்பி உன்னை என்னால் தடுக்கவும் முடியாது. இப்ப ஊர் முன் போல இல்லை. எங்க என்ன நடக்குமென்று தெரியாது. சரி சரி... கெதியா வந்திடு சரியா?"

"சரி அப்பா... அம்மா... நான் போய்வாறன்."

உரததுக்கூறிவிட்டுப் புறப்பட்டு விட்டான். பார்த்திபன் வழியில் எதிர்ப்பட்டான். இருவரும் சேர்ந்து வயல் பக்கம் பறந்தார்கள். பொன்னம்பலத்தார் கிணற்றடிப் பக்கம் போய் வந்தார். அவரது அலுவலகம் வீட்டோடுதான் இருந்தது. தனது அன்றாட வேலைகளுள் ஆழ்ந்து விட்டார். மெண்டிஸ வந்து அவருக்கு வேலைகளில் உதவினான்.

"டேய் பார்த்திபன்! திருகோணமலை நகரில் இந்தச் சுகமும் சுதந்திரமும் கிடைக்காது. பாடசாலை விட்டால் ரியூசன். ரியூசன் விட்டால பாடசாலை. அந்த வாழ்க்கை வட்டத்திலிருந்து "விட்டு விடுதலையாகி" தம்பலகாமம் வயல்வெளி வரம்புகளில் நடந்து திரிவது சுகமானது"

போகும்போது அருட்செல்வம் பார்த்திபனோடு பேசிக்கொண்டு சென்றான். பரீட்சை முடிந்ததும் வயலில் காலாற நடக்க வேண்டும் என்று திட்டமிட்டிருந்தான்.

வயலைப்பார்த்ததுமே மெய்மறந்து ரசித்தான். வேளாண்மைப் பயிர் இளங்காற்றில் பட்டாம்பூச்சி களாகப படபடத்தன. சைக்கிளை வயலிலுள்ள மாலினுள் விட்டு ஒரு கப்பல் சரித்துச் சாத்திவிட்டு வயல் வரம்புகளில் சுற்றிப பார்த்து வந்தான். பின்னால் பார்த்திபன் சிரித்துக் கதைத்து வந்தான். எதிர்பாராத விதமாக அது நடந்தது. அருட்செல்வம் கதிகலங்கிப் போனான். வயலருகில் இருந்த புதர்கள் அசைந்தன. அதனுள் பதுங்கி இருந்த இராணுவச் சிப்பாய்கள் இவர்களைச் சூழ்ந்துவிட்டனர். அவர்கள் கைகளில் துப்பாக்கிகள. துப்பாகிகள் இவர்களைக் குறி பார்த்த வண்ணம் இருந்தன. பயத்தால் நடுங்கினர். ஓடவும் முடியாது.

"அடோவ் என்னடா பார்க்கிறது. கொட்டி. வறேன்லா.."

இராணுவச் சிப்பாய்கள் அவர்களைச் சூழ்ந்து கொண்டனர். அவர்கள் நிறைபோதையல் இருந்தனர். சிலர் இவர்களைப் பார்த்து நக்கலாகச் சிரித்தனர். சிங்களத்தில் கதைத்துக் கொண்டனர். அருட்செல்வம் அவர்களிடம் கெஞ்சினான்.

"நாங்க ஸ்ருடன்ஸ். ஏ.எல. எக்சாம் எடுத்திட்டு வயல் பார்க்க வந்தநாங்க எங்கள விடுங்க"

"நீங்க ஸ்ருடன்ஸ்... வறேன்லா.. கொட்டியா... ஒக்கமட... பாடமக் தென்னம்"

முரட்டுச் சிப்பாய் கிட்டே வந்து ஓங்கி இருவருக்கும் கன்னத்தில் அறைந்தான். முன்னால் நின்றவன் திரும்பித் துப்பாக்கியின அடிப்பாகத்தால் அடித்தான். அருட்செல்வம் கீழே விழுந்தான். அவனைப் பார்த்திபன் தாங்கிப் பிடித்தான். அடுத்த அடி இருவருக்கும். அடிமேல் அடி விழுந்தது. துடித்துப் போனார்கள். எழுந்த அருட்செல்வத்துக்கு அதிர்ச்சி மேல் அதிர்ச்சி. அவன் கண்முன்னே பல இளைஞர்கள். பின்புறமாகக் கைகளைச் சேர்த்துக கட்டப்பட்டிருந்தனர். இன்னும் பலரைத தள்ளிக் கொண்டு வந்தனர். சுமார் இருபது இளைஞர்கள் எல்லோரும் மாணவப் பருவத்தினர், வயலைப் பார்ப்பதற்காக வந்தவர்கள்.

"அடோவ்.... நடங்கடா... அந்தப பக்கம்"

ஒருவன் வழியைக் காட்டினான். அது ஒரு திடல்வெளி. வயலில் அருவி வெட்டு முடிந்ததும் அந்தத் திடலில்தான் சூடு மிதிப்பார்கள். வேலிக் கட்டைகள் தெரிந்தன.

அந்தப் பெரிய வேலிக் கட்டைகளைக் காட்டினான் ஒருவன்.

"டேய் அதைப் பிடுங்கித் தூக்கிட்டு வாங்க"

பிடுங்கித் தூக்கிக் கொண்டு நடந்தார்கள். இப்படிப் பல இளைஞர்கள் யேசுவைப் போல் வேலிக் கட்டைகளைச் சிலுவைகளாகச் சுமந்து கொண்டு வந்தனர். தங்களை விட்டு விடுவார்கள் என்ற நப்பாசையில் சொல்வதை எல்லாம் செய்தார்கள். கட்டைகளைக் குவிக்கும்படி துப்பாகி முனையில் கட்டளை இட்டனர். அடிமைகள்போல் சொன்னதைச் செய்யும் துர்ப்பாக்கிய நிலை தமிழ் இளைஞர்களுக்கு வந்து சேர்ந்து விட்டதை உணர்ந்து கொண்டனர். தடியன் ஒருவன் வந்தான்.

"அடோவ் மெத்தன போலிம இன்ட... இப்பிடி நில்லுங்க..."

என்று சொல்லி அவர்களைப் பிடித்து வரிசையில் நிற்கப் பணித்தான்.அப்படியே அவர்கள் நின்றார்கள்.

"அடோவ் முன்னால் பார்த்து நில்லுங்கடா"

கட்டளை வந்தது. இந்த அப்பாவிகள் முன்னால் பார்த்தபடி நின்றார்கள். அவர்களுக்கு முன்னால் தம்பலகாமத்தின் வயல் வெளி பரந்து கிடந்தது. இப்போது இராணுவத்தினர் அவர்களின் பின்புறமாக நின்றனர். அந்த இளைஞர்கள் எதிபார்ககவில்லை. எதிர்பார்க்காதது நடந்து விட்டது. பின்புறம் இருந்த அந்த இனவாதிகளின் துப்பாக்கிகள் வெடித்தன. இளைஞர்களின் இளம் இரத்தம் சீறிப்பாய்ந்து அந்த மண்ணைக் குளிரச் செய்தது. மண்ணில் ஊறி உரமாகி ஊன்றி விதையாகி விட்டது. அவர்களது உடல்கள் சிதறிக் கிடந்தன. வெடிச்சத்தங்கள் ஊரைக் கதிகலங்கச் செய்தது. எங்கும் நாய்களின் ஊளைச் சத்தம். வெடிச் சத்தம் கேட்டு பொன்னம்பலத்தார் பதறித்துடித்தார். ஓடோடி வந்தார். தொடர்ந்து ஊர்ச்சனங்களும் வந்தனர். இராணுவத்தினர் ஒருவரையும் அந்த இடத்திற்கு அனுமதிக்கவில்லை. வீழ்ந்த சடலங்களில் இருந்து ஜீவமரணப் போராட்ட ஒலிகள் எழுந்தன. முனகல் சத்தம் மெதுவாகக் குறைந்தது. உடல்களை இழுத்து வந்தனர். சடலங்களையும் வேலிக்கட்டைகளையும் கலந்து இராணுவத்தினர் அடுக்கினர். கூடவே கொண்டு வந்த பழைய ரயர்களையும் போட்டு பெற்றோலை ஊற்றி தீயிட்டு கொழுத்தினார்கள். இராணுவ சிப்பாய்கள் நிறைபோதையில் ஆடிப்பாடி "கொட்டியா இவறாய்" எனச்சத்தமிட்டனர். இனவெறியுடன் அனுப்பப்பட்ட இராணுவத்திற்கு கண்ணில்படும் தமிழ் இளைஞர்கள் அனைவரும் புலிகள்தான்.

தீ சுடர் விட்டு எரிந்தது. மனித உடலில் தீப்பற்றிக்கொண்டால் என்ன மாதிரி எரிகிறது. இராணுவத்தினா தங்கள் வேலைகளை முடித்த பின்னர் தான் வாகனம் வந்தது. காவலுக்கு நின்ற இராணுவமும் வாகனத்தில் ஏறிய பிறகுதான் இவர்களுக்கு அனுமதி கிடைத்தது. பொன்னம்பலத்தார் ஓடிப்போகு முன் அப்பாவி இளைஞர்களது உடல்கள் எரிந்து விட்டிருந்தன. ஊர்ச்சனங்கள் திரண்டு வந்தனர். எத்தனையோ பெற்றமனங்கள் துடித்தன. அருட்செல்வத்தின் ஒரு கால் பாதம் மட்டும் மிச்சமாகி எரிந்துகொண்டிருந்தது. காலையில் வயலுக்கு அனுப்பிய மகன் மதியமாவதற்கு முன் சாம்பலாய் போவான் என்று பொன்னம்பலத்தார் நினைத்திருக்க வில்லை. அவர் குலுங்கிக்குலுங்கி அழுதார்.

அன்று அவர் மட்டுமல்ல பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றமனங்கள துடித்த துடிப்பு நெஞ்சைப் பிளந்து இதயத்திலிருந்து இரத்தத்தைக் கசியவைத்தது. அன்றிலிருந்து அவர் நடைப்பிணமாகிவிட்டார். மகனை இழந்த சோகத்தில் மாணிக்கம் கொஞ்ச நாட்களில் சாவை அணைத்துவிட்டாள். பார்த்த அரசாங்க வேலையையும் உதறித்தள்ளிவிட்டார். இன்று அவர் தன்னை மறந்து உடலால் உலாவுகிறார். இன்று இலங்கையில் பேரினவாதிகளினால் எத்தனை தாய் தந்தையர் செத்துக் கொண்டிருக்கிறார்கள். மெண்டிஸ் உள்ளம் வெந்துகொண்டிருநதது. அவனது கண்களிலும் கண்ணீர் அலை மோதியது. பொன்னம்பலத்தாரைப் பார்த்தான்.

அவரைப் பார்க்கும் திராணி அவனிடம் இல்லை. அவரது அந்தச் செயல் சரியாகவேபட்டது. "இந்த நாட்டில் ஜனநாயக ஆட்சி ஒழிக்கப் படவேண்டும் அது இருக்கும் வரை சுயநலக் கும்பல்களின் அட்டகாசம் தொடரத்தான் செய்யும்." இப்போது அவனும் பொன்னம்பலத்தாரோடு சேர்ந்து அணிதிரண்டு விட்டான். அபதுல்லாவும் இணைந்து விட்டான். பெரியதொரு கூட்டம் புரிந்துணர்வுக்கண்டன ஊர்வலத்தை தடுக்க திரண்டு விட்டது. "இங்கே நடந்து கொண்டிருப்பது ஜனநாயகத்தின் பெயரால் நடக்கும் பித்தலாட்டம். அரசியலை வைத்து வியாபாரம் நடததும் முதலாளிகளின் அடாவடித்தனம். மக்கள் அரசியல் முதலைகளை அடையாளம் கண்டு விரட்டும் நாள் தான் இந்தநாட்டின் "சுதந்திர நாள்" அது வரை அருட் செலவங்கள் மட்டுமல்ல அரவிந்த, அமானுல்லா போன்ற எல்லா இன இளைஞர்களும் பலிக்கடாக்களாகத்தான் வேண்டும்"

மெண்டிஸ் மனதில் சம்மட்டியால் ஓங்கி அடிப்பது போன்ற ஒலி அலைகள் ஒலித்தன. அவன் வேதனையில் சிக்கி விட்டான். ஓடிப்போய் பொன்னம்பலத்தாரைகட்டிப் பிடித்து தேம்பித்தேம்பி அழத் தொடங்கிவிட்டான். அவனைப் பார்த்து அனைவரது கண்களும் கலங்கின. பொன்னம்பலத்தாரின் உணர்வுகள் நியாயபூர்வமானது என ஏகோபித்து நின்றனர்.

**ச. அருளானந்தம்**
(கேணிப்பித்தன்)

திருகோணமலையில் இருந்து தமபலகாமம் போகும் வஸ் வந்தது. அதிலிருந்து இறங்கிய செல்லையா பொன்னம்பலத்தார் பக்கம் ஓடோடி வந்தார். "நான்இப்பதான்திருகோணமலையில் இருந்து வாறன். புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதரானகண்டனப பேரணியை பொலிஸார் கலைத்து விட்டார்கள். ஒரு நாளைந்து பேர்களின் நாடகம் இது". ஒரு ஏளனத தோடு சொன்னார். பொன்னம்பலத்தாரின் ஆத்திரம் அடங்கிப்போய் விட்டது. "இனிமேலும் நாங்கள் பொறுத்திருந்தால் தவித்தமுயல் அடிக்கும் பச்சோநதிகள் மடம் பிடுங்கி விடுவார்கள. இந்த நாட்டை அழிவிலிருந்து காப்பாற்ற அணிதிரளவேண்டும்" எனக் கூறிக் கொண்டு தம்பலகாமம் சந்தியிலிருந்து புதுக்குடியிருப்பை நோக்கி நடந்தார். அவர் பின்னால் மெண்டிஸ் தொடர்ந்தான் கூட்டம் அமைதியாகச் சென்றது. வீட்டுக் குள் சென்றதும் அமைதியாகி தியானத்தில் ஆழ்ந்து விட்டார்.

## கூட்டமைப்பின் முயற்சி பலிதம்!

# வடகிழக்கில் ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம்

## பிரதமர் ரணில் இணக்கப்பாடு

## சட்டமா அதிபரின் ஒப்புதல் பெற ஏற்பாடு

(கொழும்பு)

**தமிழ்தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுக்காலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அவரது அலுவலகத்தில் சந்தித்துக்கலந்துரையாடியபோது, வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஆயிரம் தமிழ் மொழி மூல தொண்டர்ஆசிரியர்களின் நியமனம் சம்பந்தமாக கொள்கையளவில் தெரிவு செய்யப்பட்ட ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனம்வழங்கப்பட வேண்டும் என்ற நிலைமை ஏற்றுக்கொள்ளப்பட்டது.**

இச்சந்திப்பில் கல்வி அமைச்சர் கருணாசேனகொடித்துவக்கு அமைச்சரவைசெயலாளர் மற்றும் கல்வி அமைச்சின் மேலதிகாரிகள்,திறைசேரி அதிகாரிகளும் சமுகமளித்தனர்.

நியமனங்கள் மேற்கொள்வதற்கு முன்பதாக சட்டமா அதிபரின் ஒப்புதலைபபெறுவதற்கு ஏதுவாக பிரதமர் உரிய கோவைகளை சட்டமாஅதிபருக்கு உடனடியாக அனுப்பி வைக்கும்படியும் ஒப்புதல் பெறப்பட்டதும் நியமனங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் படியும் கல்வி அமைச்சரை பிரதமர் பணித்துள்ளார்.

எவ்விதத்திலும் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களுக்கும் நியமனங்கள் வழங்கப்படவேண்டும் என்ற முடிவு இங்கு கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை, யாழ்ப்பாணத்தில் மாநகரசபைக்குரிய காணியில் இராணுவமுகாம் அமைப்பதற்கு இராணுவத்தினரால் எடுக்கப்பட்ட முயற்சிகள் சம்பந்தமாகவும் நேற்று கலந்துரையாடப்பட்டது.

இராணுவத்தினர்தங்கள் முகாம்களை மாற்றி அமைக்கின்றபோது தமிழ்குடிமக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில்அல்லது பொது நிறுவனங்கள் அமைந்திருக்கும் பிரதேசங்களில் இராணுவ முகாம்கள மாற்றியமைக்கப்படுவது தவிர்க்கப்படவேண்டும்என்பதை தமிழ் தேசிய கூட்டமைப்பினர் வலியுறுத்தினர்.

கடந்த 20 ஆண்டு காலயுத்தத்தின் போது தமிழ் மக்கள் இராணுவ நடவடிக்கைகளால் பலவிதமான இன்னல்களையும் துனபங்களையும் எதிர்நோக்கியுள்ளனர். இவற்றை தமிழ் மக்கள் மறக்கவில்லை என்றும் தம் மத்தியில் இராணுவத்தினரின் கூடுதலான பிரசன்னத்தை தமிழ் மக்கள் விரும்பவில்லை எனவும் தமிழ்தேசிய கூட்டமைப்புமேலும் பிரதமருக்கு சுட்டிக்காட்டியது.

இக்காரணங்களின் நிமித்தம் புதிய இராணுவமுகாம்,மாநகர சபைக்கு சொந்தமானஇடத்திலோ அல்லது அதனை அண்டிய பிரதேசத்திலோ அமைக்கப்படக் கூடாது என்றும் தற்போது இது சம்பந்தமாக விதிக்கப்பட்டிருக்கும் தடைதொடரவேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இவ்விடயம் சம்பந்தமாக உரிய சாதகமான நடவடிக்கை எடுக்கப் படும் எனவும் பிரதமர் சம்மதித்துள்ளார்.

இச்சந்திப்பில் தமிழ் கூட்டமைப்பு எம.பிக்களான,இரா.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம்,மாவை. சோ.சேனாதிராசா,செல்வம்.அடைக்கலநாதன், ந.ரவிராஜ்,பொ.கஜேந்திரகுமார், அ.சந்திரநேரு, கே.துரைரெட்ணசிங்கம். (உ)

## அருளுரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழுவினது ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணி தொடக்கம்12 மணி வரையும் நல்லூர் பண்டாரமாளிகை வளவிலுள்ள ஆதி நரசிங்க வையிரவர் ஆலயத்தில் இந்தியாவில் இருந்து வருகை தந்திருக்கும் ஸ்ரீ கல்கி பகவானின் சீடர் ஸ்ரீ ராஜேஷ் பகவத்தாஸா,'வாழ்க்கையில் அமைதி பெற' எனும்பொருள் பற்றி அருளுரை நிகழ்த்தவுள்ளார். (உ)

## சமாதான முயற்சி பற்றி கருத்துக்கணிப்பு

## மக்களும் மதத்தலைவர்களுமே வலியுறுத்து

### அரசு இதுவிடயத்தில் எவ்வித தீர்மானமும் எடுக்கவில்லை என்கிறார் பீரிஸ்

(யாழ்ப்பாணம்)

சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக பொதுமக்களின் கருத்தை அறிய கருத்துக்கணிப்பு ஒன்றினை நடத்தவேண்டும்என பொது மக்களும் மதத்தலைவர்களும் கல்விமான்களும் அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றனர்.

இது விடயத்தில் அரசு தனிப்பட்ட ரீதியில் எந்த விதமான தீர்மானங்களைஎடுக்கவோ ஆலோசனைகளைப் பெறவோஇல்லை.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் அமைச்சரவை பேச்சாளர் ஜீ.எல். பீரிஸ் வெளிநாட்டு ராஜ தந்திரிகள் சிலரை அண்மையில் சந்தித்து இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அமைச்சர் பீரிஸ் மேலும் கூறுகையில்,

ஐக்கியதேசியமுன்னணி அரசு மேற்கொள்ளும் எந்த ஒரு திட்டத்திற்கும்தமது அங்கீகாரம் பெறப்படுவது அவசியம் என பொதுமக்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இனப்பிரச்சினைக்கான சமாதான தீர்வு தொடர்பில் சில நெருக்கடிகள் ஏற்பட்டாலும்அது தொடர்பான பிரேரணைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து மக்களின் அங்கீகாரத்தை கோருவது சிரமமானதாகவே இருக்கும் என்றார்.

இதேவேளை,சமாதான முயற்சிகள் தொடர்பாக கருத்துக்கணிப்பொன்றினை அடுத்தமாதம் அளவில் நடத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சர் பீரிஸ் ஊடகத்தகவல்மையத்தில் அண்மையில் நடைபெற்ற அமைச்சர்களின் முடிவுகளை அறிவிக்கும் வாராந்த செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தார்.

இதற்கு தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் மற்றும் எதிரணியின் பிரதம கொறடாவான மங்கள சமரவர மலையகமக்கள் முன்னணி ஆகியன தமது முழு எதிர்ப்பைத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது இவ்விதம் இருக்க அனுராதபுரமாவட்டத்தில் அண்மையில் நடைபெற்ற பிக்குமார்களுக்கான விழிப்புணர்வுக்கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சரவை பேச்சாளர் ஜீ.எல். பீரிஸ்,

சமாதான முயற்சிகளுக்கு மகாநாயக்கர்களின் வழிநடத்தல் மிகவும் அவசியமானது.

சமாதான முயற்சிகள் குறித்து மகா சங்கத்திற்கு அவ்வப்போது தெரிவிக்கவேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எமக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இலங்கைக்குரிய கலாசாரம் மற்றும் இனவரையறைகளை எமது அரசு ஒரு போதும் மீறாது.

அத்துடன் சமாதான முயற்சிகளுக்கு மகாநாயக்கர்கள் தொடர்ந்தும் ஆதரவு வழங்கவேண்டும்.சமாதான பேச்சு வார்த்தைகள்விரைவில் வெற்றி பெறுவதற்கு மகாநாயக்கர்களின் ஆலோசனையும்ஆசியும் கிடைக்கவேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.



இதேவேளை,இலங்கையின் இன முரண்பாடுகளுக்கு விரைவில் தீர்வு காணவும் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தும் நோக்கிலும்நேற்று முன்தினம்புதன்கிழமை தென்னாபிரிக்காவிற்கு சென்றுள்ள ஜீ.எல். பீரிஸ்அங்குள்ள அரசியல் தலைவாகளுடன் பேச்சுவாாத்தை நடத்தவுள்ளமை குறிப்பிடததக்கது. (உ-8,10)

## மாலைதீவுப்பெண் கல்கிசையில் படுகொலை

(கொழும்பு)

கல்கிசைப் பகுதியில் உள்ள வீடுஒன்றில் பெண் ஒருவர் கழுத்து வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

மாலைதீவைச் சேர்ந்த 48 வயதுடைய பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டவராவார்.

7மாதங்களுக்கு முன் மாலைதீவில் இருந்து இலங்கை வந்த பிரஸ்தாப பெண்,கல்கிசையில் உள்ள வீடு ஒன்றில் வாடகைக்கு வசித்து வந்தார்.

இக் கொலை தொடர்பாக கல்கிசைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (இ-3)

## விபத்தில் காயம்

(சுன்னாகம்)

இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதியதில் குடும்பஸ்தர் ஒருவர் காயம் அடைந்த நிலையில் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுன்னாகம் விளக்கடிப்பகுதியில் இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் சண்டிலிப்பாய் ஆலங்குளாயைச் சோந்த செ.இராசலிங்கம் (வயது 52) என்பவரே காயமடைந்தவராவார். (உ-3,6)

## இலங்கை அணி ஏனோதானோ மனோபாவம்

## கிரிக்கெட் ரசிகர்கள் கடும்கோபம்

(கொழும்பு)

ஷார்ஜா வெற்றிக்கிண்ணத்தை இலங்கை அணி மிக இலகுவாக கைப்பற்றி விடும் என எதிர் பார்க்கப்பட்டிருந்தவேளையில், இறுதிப்போட்டிக்குக்கூட தகுதி பெறாது அது வெளியேறியுள்ளமை ரசிகர்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

புதிய வீரர்களை அறிமுகப்படுத்தவும் சிரேஷ்ட வேகப்பந்து வீச்சாளர்களுக்கு ஓய்வு கொடுக்கும் வகையிலுமே சிம்பாப்பே அணியுடனான போட்டி அமைந்திருந்தது என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முதல் போட்டியிலே அறிமுகவீரர்களைக்கொண்ட பாகிஸ்தான் அணியுடன் 7இலக்குகளால் தோல்வியுற்று உலகக்கிண்ண சுற்றுப் போட்டியில் கென்யஅணியுடனான போட்டியில் தோல்வியுற்றமைக்கு பழிதீர்க்கும் வகையில் அவ்வணியுடன் பெரு வெற்றி கண்டிருந்தது இலங்கையணி.

ஆயினும் சிம்பாப்பேஅணி பாகிஸ்தான் அணியுடன் தோல்வியுற்றாலும் தாம் சோடைபோனவர்கள்அல்ல என்பதை கென்ய அணியுடனான போட்டியில் கடின போராட்டத்தின் பின்னர் நிரூபித்தனர்.

இந்நிலையில் இலங்கை மற்றும் சிம்பாப்பே அணிகளுக்கிடையான வாழ்வா?சாவா? போராட்டம் இடம் பெற்றது. இப்போட்டியில் வெல்லும் அணி இறுதிப்போட்டிக்கு தெரிவாகும் என்பது இலங்கையணிக்குத் தெரியாதா?

கணுக்காலில் ஏற்பட்ட வலி காரணமாக ஷார்ஜா சுற்றுப்போட்டியிலிருந்து வாஸ் வெளியேற சிம்பாப்பே அணியுடனான போட்டியில் தில்ஹாரவுக்கும் ஓய்வு வழங்கியது இலங்கை கிரிக்கெட்கட்டுப்பாட்டுச்சபை. உலகக்கிண்ண போட்டிகளிலபந்து வீசியமூன்று வேகப்பந்து வச்சாளர்களும் அணியில் இல்லை. இப் போட்டியில் பிரபாத் நிஸங்க, கமகே ஆகியோர். வேகப்பந்து வச்சாளர்களாக பந்து வீசினர். இவர்களதுஅனுபவக்குறைவை பயன்படுத்த சிம்பாப்பே அணி தவறவில்லை.

முதல் இரு போட்டிகளிலும் முன் வரிசை வீரர்கள் துடுப்பாட்டத்தை கோட்டை விட,குமார்சங்ககார ஆட்டமிழக்காமல் சதங்களை குவித்து அணியைக்காத்தார்.

சிம்பாப்பே அணியுடனான போட்டியில் அவரும் ஆட்டமிழக்க, இலங்கை அணி வெறும் 193 ஓட்டங்களைப்பெற்று சகல இலக்குகளையும் இழந்தது. ஆயினும் களநிலைமை பந்து வீச்சுக்கு சாதகமாக அமைந்தமையால் சிம்பாப்பே அணி போட்டியில் தோல்வியுறும் என்றே எதிர்பார்க்கப்பட்டபோது முடிவு மாறாகவே அமைந்தது.

இலங்கைஅணியின் ஏனோதானோ என்ற அணித் தெரிவு ,விளையாட்டு ஆகியன ரசிகர்களை பெரும் கவலையில் ஆழ்த்தியுள்ளது.(உ-55)

### மக்கள் வங்கி

## வாடிக்கையாளருக்கு வழமைபோல் வெகுமதிகள்

(யாழ்ப்பாணம்)

நாடெங்கிலும் அமைந்திருக்கும் அடகுமற்றும் சேமிப்பு நிலையங்களை உள்ளடக்கிய மக்கள் வங்கியின் 601 கிளைகளும் சேவை நிலையங்களும்புத்தாண்டு தினமான எதிர் வரும் 14ஆம் திகதி பி.ப. 2 மணி தொடக்கம்6மணிவரையில் பாரம்பரிய புத்தாண்டு கொடுக்கல் வாங்கல்களுக்கென திறந்திருக்கும்.

புத்தாண்டு தினத்தில் வங்கிக்கு வருகை தந்து சுபவேளையில் கொடுக்கல்வாங்கல்களை மேற்கொள்ளுமாறு மக்கள் வங்கி இலங்கை வாழ் மக்கள் அனைவரையும் அழைத்துள்ளது.

முன்னைய வருடங்களைப் போலவே இவ் வருடமும் புத்தாண்டு கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு வங்கிக்கு வருகை தரும் வாடிக்கையாளர்களுக்கு புத்தாண்டு பாரம்பரியத்துக்கு மதிப்பளிக்கும்வகையில்வங்கியினால் ஒரு வெகுமதி வழங்கப்படவுள் ளது.

அன்றைய தினம் 15ஆயிரம்ரூபா பெறுமதியான வைப்புச்சான்றிதழை மக்கள் வங்கியிடமிருந்து கொள்வனவுசெய்யும் வாடிக்கையாளர்களுக்கு அழகான ஒரு பித்தளை விளக்கு பரிசாக வழங்கப்படவுள்ளது. (உ)









# சதாம் உயிர் தப்பியிருக்கலாம்

(லண்டன்)

பக்தாத் நகரில் அமெரிக்கப் போர் விமானம் நடத்திய குண்டுவீச்சுத் தாக்குதலில் சிக்காமல் ஈராக் அதிபர் சதாம் ஹுசைன் உயிர் தப்பியிருக்கக்கூடும் என்று பிரிட்டிஷ் உளவுத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

சதாம் ஆலோசனை நடத்திய கட்டடம் மீது அமெரிக்க விமானம் குண்டு வீசியது. ஆனால் இந்த குண்டுவீச்சுத் தாக்குதலுக்கு முன்பே சுரங்கப்பாதை வழியாகவோ அல்லது காரிலோ சதாம் தப்பிச் சென்றிருக்க வாய்ப்புக்கள் உள்ளன. எனினும் இதுபற்றி உறுதியாக எதனையும் கூற இயலாது என்று உளவுத்துறை வட்டாரங்களை மேற்கோள் காட்டி லண்டன் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. (பி)

# ஐ.நா.பொதுச்சபையை கூட்ட அரபு நாடுகள் கோரிக்கை

(நியூயோர்க்)

ஈராக்கில் போர்நிறுத்தம் கொண்டுவருவதற்கான தீர்மானத்தை நிறைவேற்ற ஐ.நா.பொதுச்சபையின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டவேண்டும் என்று அரபு நாடுகள் முறைப்படி கேட்டுக் கொண்டுள்ளன.

இதற்கான வேண்டுகோள் கடிதத்தை அரபு நாடுகள் கூட்டமைப்பின் தலைவர் அப்துல்லா அல்சைடி அனுப்பியுள்ளார்.

இந்த வேண்டுகோள் குறித்து ஆய்வு செய்ய ஐ.நா. பொதுச் சபையின் 28 உறுப்பினர்கள் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற விருக்கின்றது.

இச்சபையில் நிறைவேற்றப்படும் தீர்மானம் அமெரிக்காவைக் கட்டுப்படுத்தாது. ஆனால் இக்கட்டான நிலை அமெரிக்காவுக்கு ஏற்படும் எனக் கூறப்படுகின்றது. (பி)

### ரஷ்யா, பிரான்ஸ், ஜெர்மன் தலைவர்கள்

# மறுசீரமைப்புப் பற்றி ஆலோசிக்கக் கூடுகின்றார்கள்

(பெர்ளின்)

ஈராக் மறுசீரமைப்பு குறித்து விவாதிப்பதற்காக ரஷ்ய அதிபர் விளாடிமீர் புடின், பிரான்ஸ் அதிபர் ஜேக்ஸ் சிராக் மற்றும் ஜெர்மனி அதிபர் ஜெரார்டு ஷ்ரோடர் ஆகிய தலைவர்களின் உச்சி மாநாடு செயின்ட் பீட்டர்ஸ் பர்க்கில் வெள்ளிக்கிழமை நடைபெறுகிறது.

ஈராக் மறுசீரமைப்பில் ஐ.நா.வின் பங்கு குறித்தும் ரஷ்யா மற்றும் இதர ஐரோப்பிய நாடுகளுடனான ஒத்துழைப்பு குறித்தும் உச்சி மாநாட்டில் விவாதிக்கப்படும் என்று ஜெர்மன் அரசின் செய்தித் தொடர்பாளர் பெர்ளினில் புதன்கிழமை தெரிவித்தார்.

ஈராக் மீதான போருக்கு இந்த 3 நாடுகளுமே எதிர்ப்புத் தெரிவித்துவந்தன. போருக்குப் பின் ஈராக்கில் மறுசீரமைப்பு மற்றும் புதிய அரசு அமைப்பதிலும் ஐ.நா.முக்கிய பங்காற்ற வேண்டும் என்று இந்த நாடுகள் கோரியுள்ளன.

உச்சிமாநாட்டில் பங்கேற்பதற்காக செயிண்ட் பீட்டர்ஸ் பர்குக்கு வெள்ளிக்கிழமை செல்வதாக ஜெர்மன் அதிபர் ஜெரார்டு கூறியுள்ளார். அத்துடன் நீண்ட நாட்களாக எதிர்பார்க்கப்பட்ட ரஷ்ய-ஜெர்மன் அதிபர்களின் உச்சிமாநாடும் நடைபெறும். (பி)


# மொஸ்கோ தீவிபத்தில் 28 சிறுவர் பலி

(மொஸ்கோ)

ரஷ்ய தலைநகரான மொஸ்கோவில் பாடசாலை விடுதி யொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 28 சிறுவர்கள் உயிரிழந்ததுடன், 14 பேர் காயமுற்றனர்.

காயமுற்றவர்களில் நால்வரின் நிலை பாரதூரமானது என கூறப்படுகின்றது.

ரஷ்யப் பாடசாலை ஒன்றில் இவ்வாரம் ஏற்பட்ட 2வது தீவிபத்து இதுவாகும். கடந்த திங்கட்கிழமை சைபீரியா குடியரசில் இடம்பெற்ற தீ விபத்தொன்றில் 22மாணவர்கள் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (பி-9)





மத்திய பக்தாத் நகரில் உள்ள முக்கிய பள்ளி ஒன்றுக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டிருந்த ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைனின் இருபது அடி உருவச் சிலையை அமெரிக்கப் படையினர் அகற்றியபோது எடுக்கப்பட்ட காட்சிகள் சில...

## இன்று ஒரு தகவல்

### அன்பின் பெருமை

"இந்த உலகத்தில் எல்லாரும் மகிழ்ச்சிதரக்கூடிய ஒரு பொருள் எது?" இது ஒரு முக்கியமான கேள்வி. இந்தக் கேள்விக்குப் பொருத்தமான ஒரு பதிலை உங்களாலே சொல்ல முடியுமா? கொஞ்சம் யோசித்துப் பாருங்கள் பணம் என்று சொல்லலாமா? கையில் காசு இல்லாதவனிடம் ஒரு பத்து ரூபாயைக் கொடுத்தால் அது அவனுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கும். ஏற்கனவே வருமானவரி பிரச்சினையில் இருக்கிறவரிடம் இன்னும் கொஞ்சம் பணம் இந்தாருங்கள் என்று சொன்னால் அது சங்கடத்தைத்தான் கொடுக்கும்.

"சரி! இனிப்பு என்று சொல்லலாமா?" சர்க்கரை வியாதிக்காரர்களுக்கு அது என்ன சந்தோஷத்தைக் கொடுக்கும்? ஆக எல்லோருக்கும் வேறுபாடு எதுவும் இல்லாமல் சந்தோஷத்தைக் கொடுக்கக் கூடியது வேறு ஏதோ ஒன்று இருக்கிறது. அது என்னஎன்று கண்டு பிடிப்போம். அதுதான் இன்றைக்குத் தகவல் அதைக் கண்டுபிடிக்க வேண்டுமென்றால் அந்தக் கதையைக் கேளுங்கள்.

ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவருக்கும் இதேசந்தேகம் வந்துவிட்டது. அதாவது எல்லோருக்கும் இன்பம் தரக்கூடிய பொருள் எது?" என்று இதற்குபதில்தெரிந்து கொள்வதற்கு ஆசைப்பட்டார். சரி! அதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தார். நாட்டு மக்களுக்கு பகிரங்கமாக ஒரு அறிவிப்புக் கொடுத்தார். நமது நாட்டுமக்கள் இன்பம்தரக்கூடிய பொருள் எதுவென்று நினைக்கிறார்களோ அதைக்கொண்டுவந்து அரண்மனையில் உள்ள கண்காட்சி மண்டபத்தில்வைக்கலாம். அப்படி அவர்கள் வைக்கின்ற பொருள்களிலே எது எல்லாருக்கும் இன்பம்தரக் கூடியதாக இருக்குமோ அதை வைத்தவருக்கு ஆயிரம் பொற்காசுகள் பரிசு" என்று அறிவித்துவிட்டார்.

ஜனங்கள் இந்த அறிவிப்பைக் கேட்டார்கள். சும்மா இருப்பார்களா? ஆயிரம் பொற்காசுகள் என்றால் சும்மாவா? அவரவர்கள் கையில் என்னென்ன கிடைத்தனவோ அவற்றையெல்லாம் கொண்டு வந்து அரண்மனைகாட்சி மண்டபத்தில் வைத்துவிட்டார்கள். அதன் பின்னர் ராஜா அங்கே வந்தார். ஒவ்வொன்றாகப் பார்த்துக்கொண்டே வந்தார்.

முதலில் ஒரு குயில் இருந்தது. இனிமையாகப் பாடக்கூடிய குயில். இந்தக் குயிலின் இன்னிசை எல்லோருக்கும் இன்பம் தரக் கூடியதுதான். இருந்தாலும் காது கேளாதவர்களுக்கு இந்த இசை எப்படி இன்பம் தரமுடியும்? ஆகவே இது சரியில்லை என்று சொல்லிவிட்டார் ராஜா அடுத்தபடியாகப் போய்ப்பார்த்தார். ஒரு அழகான மயில் அங்கே தோகை விரித்து ஆடிக்கொண்டு இருந்தது. இந்த மயிலின் ஆட்டம் மனதுக்கு இன்பம் தரக் கூடியதுதான். இருந்தாலும் பார்வையற்றோர், இந்த ஆட்டத்தைப் பார்த்து இரசிக்க முடியாதே! அதனால் இதுவும் சரியில்லையென்று சொல்லிவிட்டார்.

அதற்கு அடுத்தபடியாகப் போனார். பலவகையான இனிப்புப்பண்டங்கள் வைத்திருந்தார்கள். அதைப் பார்த்து வயதானவர்களுக்கும் - நோயாளிகளுக்கும் இது இன்பம் தராது துன்பம் தான் கொடுக்கும்" என்றார். இப்படியே பார்த்துக் கொண்டேபோனார். அழகான மலர்கள், கனிகள் ஓவியங்கள் எதுவுமே பொருத்தமாகத் தெரியவில்லை. சகலருக்கும் இன்பம் தரக்கூடிய வகையிலே எதுவுமே இல்லை. கடைசியாக வந்தார். அங்கு ஒரு களிமண் பொம்மை இருந்தது. அது என்ன தெரியுமா? பசியாலே வாடியிருக்கின்ற ஒருவருக்கு ஒரு அம்மா இனிமையாகப் பேசிக் கொண்டு சோறுபோடுவது மாதிரி அந்தப் பொம்மையைச் செய்திருந்தார்கள். அதற்குக் கீழே அன்பு என்று எழுதியிருந்தது.

இராஜா பளிச்சென்று ஒரு முடிவுக்கு வந்தார். அந்தப் பொம்மையைச் செய்த சிற்பியை வரவழைத்தார். பரிசு கொடுத்தார். "அன்பு ஒன்று தான் எல்லாருக்கும் இன்பம் அளிக்கக் கூடிய பொருள். காதுகேளாதவர்களும் அதைக்கேட்கமுடியும், பார்வை இல்லாதவர்களும் அதைப் பார்க்கமுடியும். குழந்தைகளும் அதை உணரமுடியும் என்று அதற்கு விளக்கம் கொடுத்தார் இராஜா.

இந்த உலகத்திலே எல்லாருக்கும் மகிழ்ச்சிதரக் கூடியது அன்புதான். அதைப்புரிந்துகொண்டுதான் சில கணவன்மார் மனைவிமேல் மிகவும் அன்பைக் காட்டிக் கொள்வது வழக்கம். ஒரு வீட்டு வாயில் படிப்பக்கமாக மழைக்குவந்து ஒதுங்கினார் ஒருவர். மழைதூறிக் கொண்டிருந்தது. இருட்டுநேரம் அந்த வீட்டிலிருந்தவர் "இன்று இரவு வேண்டுமென்றால் இங்கே தங்கிவிட்டுக் காலையில் போங்கள் என்றார். உடனே இவர் "மிக்க நன்றி! ஒரு பத்து நிமிஷத்தில்இதோ வந்து விடுகின்றேன்" என்று சொல்லிவிட்டு எங்கேயோ ஓடினார். பத்து நிமிஷம் கழித்துத் திரும்பி வந்தார். "ஆமாம் எங்கே போய்விட்டு வந்தீர்கள்?" என்று கேட்டார் வீட்டில் இருந்தவர். "எங்கள் வீட்டிற்குப் போய் மனைவியிடம் இன்று இரவு இங்கேயே தங்கிக் கொள்கின்றேன் என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன் என்றார் அவர் அன்பிலே இது ஒரு ரகம்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# அரசியல்பிரமுகர்களைச் சந்திக்க அகாஷி அமெரிக்கா பயணம்

(கொழும்பு)

இலங்கைக்கான ஜப்பானிய விசேடதூதுவர் யசூசிஅகாஷி




நேற்றுமுன்தினம் அமெரிக்காவிற்கு விஜயம் செய்துள்ளார்.

எதிர்வரும் யூன்மாதம் 9,10ஆம் திகதிகளில் ஜப்பானில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவிவழங்கும் மாநாட்டிற்கு முன்னோடியாக அமெரிக்காவில் எதிர்வரும் 14 ஆம் திகதி இடம்பெறும் மாநாட்டில் அகாஷி கலந்துகொள்ளவுள்ளார்.

அதற்கு முன்னர், அமெரிக்காவின் அரசியல் பிரமுகர்கள் பலரை சந்தித்துப்பேசுவதற்காகவே அகாஷி நேற்றுமுன்தினம் அமெரிக்காவிற்கு சென்றுள்ளதாக கூறப்படுகிறது.

இதேவேளை, எதிர்வரும் 14 ஆமதிகதி வாஷிங்டனில் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவிவழங்கும் முன்னோடிக்கூட்டத்தில் நோர்வேபிரதி வெளிவிவகார அமைச்சர் விடார்ஹெல்கிசன் மற்றும் இலங்கையின் பொருளாதார மீள்கட்டமைப்பு அமைச்சர் மிலிந்தமொறகொட ஆகியோர் சமாதான முயற்சிகள் குறித்து விளக்கிக் கூறவுள்ளனர்.

இதேவேளை, அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று முன்தினம் சுவிஸ்சர்லாந்திற்குச் சென்றுள்ளார்.

இவர் அங்கிருந்து நேரடியாகவே வாஷிங்டன் மாநாட்டில் கலந்து கொள்வர் என தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

### சிறுபான்மையின.மக்களின்

# உரிமைகள் தொடர்பாக தேசியக் கொள்கை வகுப்பு

(கொழும்பு)

சிறுபான்மை இனமக்களின் உரிமைகள் தொடர்பாக தேசியக் கொள்கையொன்று வகுக்கப்பட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

சிறுபான்மை இனமக்களின் உரிமைகளைப் பாதுகாக்கவென, மனித உரிமைகள் ஆணைக்குழு நாட்டு மக்கள் மத்தியில் கருத்துக் கணப்பு ஒன்றை நடத்தி வருகிறது.

யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை ஆகிய இடங்களில் உள்ள பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், கல்விமான்கள், பொதுமக்கள் மத்தியில் இக்கருத்துக்கணிப்பு நடைபெறுகிறது.

இக்கருத்துக் கணிப்பை அடிப்படையாகக் கொண்டே தேசியக் கொள்கை வகுக்கப்படவுள்ளது.

சிறுபான்மை இனமக்களை எவ்வாறு பாதுகாப்பதென்பதை நோக்கமாகக் கொண்டு இந்தத் திட்டத்துக்கு, ஐரோப்பிய சமூகம் உதவி வழங்குவது குறிப்பிடத்தக்கது. (உ-8)

## இராசி பலன்

11.04.2003

(பங்குனி 28, வெள்ளி)

நவமி ந.ப. 12.11 வரை

பூசம் பி.ப 2.59 வரை

இராகுகாலம் 10.36 - 12.06

சுபநேரம் 6.06 - 7.36

**மேடம்**
மனச்சஞ்சலம், காரியதாமதம், தேவையற்ற வார்த்தை, மாதா சுகம்

**இடபம்**
வாக்கு மேன்மை, சௌக்கியம், புதிய ஆடை, பெண்கள் நட்பு

**மிதுனம்**
எந்தக்காரியத்திலும் தாமதம், குடும்பத்தகராறு, சுபசெலவு, புதிய திருப்பம்

**கடகம்**
புதிய ஆடை, தெய்வதரிசனம், புதியதிட்டம், வெகுமானம்

**சிங்கம்**
கோபப்படுதல், வீண் அலைச்சல், சுபசெலவு, சோம்பல்

**கன்னி**
நல்ல படுக்கை, புதியபொருள்கள் சேர்க்கை, தெய்வதரிசனம், கௌரவமான நிலை

**துலாம்**
பிரபுத்தனம், நன்கொடை, கருமங்கள் கைகூடும், நல்ல முயற்சி

**விருச்சிகம்**
சரீரபிரையாசை, வயிற்று வலி, தேசாந்திரவாசம், முயற்சி தாமதம்

**தனுசு**
வாகன பயம், அஜீரணக்கோளாறு, பொருள் நாசம், கலகம்

**மகரம்**
சென்றஇடத்தில் செல்வாக்கு, உறவினர் வருகை, தெய்வதரிசனம், தொழில் நன்மை

**கும்பம்**
சுவாரஷ்யம், அதிக பிரையாசை, ஆரோக்கியம், தர்மம்

**மீனம்**
பணத் தட்டுப்பாடு, மனக்குழப்பம், காரிய தாமதம், வியாபார நன்மை

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்.

# வர்த்தகர்களுக்கு எதிராக கடும்நடவடிக்கை

## அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

புத்தாண்டு தினத்தைஒட்டி பொது மககளுக்கு தேவையான அத்தியாவசியப்பொருட்களை குறைவான எடையிலேயோ அதிகரித்த விலையிலேயோ விற்கும் வர்த்தகர்களுக்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக வர்த்தக நுகர்வோர் அமைச்சர் ரவி கருணாநாயக்கா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக திடீர் சுற்றிவளைப்புக்களை மேற்கொள்ளுமாறும் சம்பந்தபபட்ட அதிகாரிகளுக்கு தாம் உத்தரவிட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அத்தியாவசிய உணவுப்பொருட்கள் மற்றும் புத்தாடைகள் வாங்குவதற்காக பெரும் எண்ணிக்கையான நுகர்வோர் நகரப்பகுதிகளை நாடி வருகின்றனர்.

இவ்வாறு வருபவர்களுக்கு பலர் போலியான மற்றும் தரம் குறைந்த பொருட்களை விற்பனை செய்துவருவதாக முறைப்பாடுகள் தமக்கு கிடைத்திருப்பதாகவும் மேலும் அமைச்சர் கூறியுள்ளார். (உ-10)

### ரோக்கியோ மாநாட்டு

# இறுதி அறிக்கை தயாரிப்பு முடிவுறும் தறுவாயில்

(கொழும்பு)

ரோக்கியோவில் எதிர்வரும் ஜுன்மாதம் நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் மாநாட்டில் சமர்ப்பிப்பதற்கான வடக்கு-கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு உடனடி மனிதாபிமான தேவைகள குறித்த நகல் மதிப்பீட்டறிக்கையினை இறுதி அறிக்கை இம்மாத இறுதியில் பூர்த்தியாகும் என புனர்வாழ்வு புனரமைப்பு மீள்குடியமர்வு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த 19ஆம் திகதி முதல் 24ம் திகதி வரை கிளிநொச்சியில் அரசு, விடுதலைப் புலிகள் மற்றும் ஐ.நா. தொண்டர் அமைப்பு என்பனவற்றின் பங்களிப்புடன் நிறுவப்பட்ட 7 குழுக்களும் 13 துறைசார்ந்த பிரதிநிதிகளுடன் இணைந்து இந்த அறிக்கையினை தயாரித்துள்ளன.

இதனை அடிப்படையாகக் கொண்டே ரோக்கியோவில் நடைபெறவிருக்கும் இலங்கைக்கான உதவி வழங்கும் மாநாட்டில் விவாதம் நடைபெறவுள்ளது.

மேற்படி நகல் அறிக்கை தொடர்பாக அரசாங்க மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகள் ஐக்கிய நாட்டு தொண்டர் நிறுவன பிரதிநிதிகள் அடங்கிய இவ் 7 குழுக்களும் ஆராய்ந்தே இவ் இறுதி அறிக்கை தயாரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, இவ் அறிக்கை சம்பந்தமாக இம்மாத இறுதிக்குள் கிளிநொச்சியில் சந்திப்பொன்றும் நடைபெறவுள்ளதாக தெரிய வருகிறது. (உ-10)

# முதியவர் மார்பில் கத்திக்குத்து கைவிரல் ஒன்றும் துண்டிப்பு

### இனம்தெரியாதோர் அயோக்கியத்தனம்

(குருநகர்)

ஆனைக்கோட்டை பழம்வீதியைச் சேர்ந்த வயோதிபர் ஒருவரை இனந்தெரியாதநபர் சிலர் கூரிய ஆயுதங்களால் மார்பில் குத்திக் காயப்படுத்தியதுடன் கைவிரல் ஒன்றையும் துண்டித்துள்ளனர்.

இச்சம்பவம் கடந்தஞாயிற்றுக்கிழமை ஆனைக்கோட்டை குருசு மதவடிப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

ஆனைக்கோட்டை பழம் வதியைச் சேர்ந்த பக்கர் இராசதுரை (வயது 65) என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவர்.

மேற்படி முதியவர் சிகிச்சையின் பொருட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(உ-74)

அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பிற்பயக்கும் நற்பா லவை
-குறள்-

# வலம்புரி

## அமெரிக்க ஏகாதிபத்தியம்

ஈராக் தலைநகர் பாக்தாத்தை அமெரிக்கக் கூட்டணிப் படைகள் கைப்பற்றி விட்ட செய்திகள் உறுதியாகி விட்டது. பாக்தாத் நகரை கைப்பற்றுவதுதான் அமெரிக்காவின் இலக்கு அல்ல. ஈராக் முழுவதையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதே அமெரிக்காவின் இலக்காகும். அந்த இலக்கை அடைவதற்கு பாக்தாத்தைக் கைப்பற்றுவது அவசியமாக இருந்தது.

விமானக்குண்டுத் தாக்குதல்கள், பீரங்கித் தாக்குதல்கள் என அமெரிக்கப் படைகள் ஈராக்கை நாசகாரம் செய்தே தலைநகர் பாக்தாத்தை கைப்பற்றி உள்ளது. தனி ஒரு சதாமின் மிரட்டல்களுக்கும் அடங்காத்தனத்துக்கும் பதிலடி கொடுப்பதற்காகவே ஈராக் மீது அமெரிக்கா இத்தகைய தாக்குதல்களை நடத்தியதா? அல்லது ஈராக் கொடூரமான இரசாயன ஆயுதங்களை வைத்துள்ளதென்பதற்கான தாக்குதலா? என்ற கேள்விகள் இப்போது ஓய்ந்து விட்டன. ஏனெனில் அமெரிக்காவின் தாக்குதலுக்கு மேற்கூறப் பட்ட இரண்டு விடயங்களுமே காரணமாக அமையாதென்பது இப்போது உலக நாடுகளுக்குப் புரிந்து விட்டது.

ஆக, ஈராக் மீது தாக்குதல் நடத்தி ஈராக்கின் எண்ணெய் வளத்தை சுரண்டுவது ஒரு நோக்கம். மற்றையது ஈராக் மீது தாக்குதல் நடத்தி அமெரிக்காவின் போர்ப் பலத்தை உலக நாடுகளுக்குக் காட்டுவது. இவ்விரண்டு காரணங்களையும் நிறைவேற்றிக் கொள்வதற்காகவே ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்தது.

மிகப் பயங்கரமான இரசாயன ஆயுதங்களை ஈராக் வைத்துள்ளதென அமெரிக்கா குற்றஞ் சாட்டிய பின்னணியிலேயே ஈராக் மீதான தாக்குதல் தொடுக்கப்பட்டது.

ஆனால் போர் தொடர்ந்து 21 நாட்கள் கடந்த நிலையிலும் ஈராக்கிடம் இரசாயன ஆயுதங்கள் இருப்பதற்கான அறிகுறிகள் எதுவும் இதுவரை தென்படவில்லை. அப்படித்தான் ஈராக்கிடம் இரசாயன ஆயுதங்கள் இருப்பினும் அவை அமெரிக்கா ஈராக் மீது பயன்படுத்துகின்ற ஆயுதங்களை விட பயங்கரமானவை அல்ல என்ற முடிவை நடுநிலையாளர்கள் எடுத்துக் கொள்வர். எதுவாயினும் ஈராக் மீதான தாக்குதலில் அமெரிக்கா ஈட்டிக்கொள்ளும் ஒவ்வொரு வெற்றியும் உலக நாடுகள் மீது அதிகாரம் செலுத்தும் தகுதியை அமெரிக்கா பெற்றுக்கொள்கிறதென்பதே உண்மை.

இப்போது ஈராக் மீது விழுகின்ற அடியை மௌனமாகப் பார்த்துக் கொண்டிருக்கும் நாடுகள் இனிமேல் மருந்துக்கும் கதைக்க முடியாத அளவிற்கு தம்மை ஆக்கிக் கொண்டன.

சுருங்கக் கூறின் ஈராக்கின் தோல்வி உலக அரங்கில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் தொடக்கம் எனலாம்.

# சமாதானப் பேச்சுக்கு இடமளிக்க சுவிற்சர்லாந்து அரசாங்கம் தயார்

### அந்நாட்டு வெளியுறவு அமைச்சு அதிகாரி அறிவிப்பு

(போர்ண்)

இலங்கையில் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபட்டிருக்கும் இருதரப்பினரும் விரும்பினால், சுவிற்சர்லாந்தில் பேச்சுக்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்குத் தாம் தயாராகவிருப்பதாக சுவிற்சர்லாந்தின் வெளியுறவு அமைச்சு அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாயன்று போர்ண் நகரத்தில் வைத்து இது பற்றிக் கருத்துக் கூறிய மேற்படி வெளியுறவு அமைச்சு அதிகாரி மார்க்கஸ் ஹினிஜர்,

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவை விரிவாக்கி வலுப்படுத்துவதற்கு ஹக்கோன் பேச்சுக்களில் தீர்மானிக்கப்பட்டிருப்பது எமக்குத் தெரியும்.

எம்மிடம் இதற்கான கோரிக்கை முன்வைக்கப் படுமாயின் நாமும் அதில் இணைந்து பணியாற்ற தயாராகவுள்ளோம் என்று மேலும் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுக்கள் இதுவரை ஐரோப்பாவில் ஒஸ்லோவிலும் பேர்லினிலும் மட்டுமே இடம்பெற்றிருக்கின்றன.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவில் இப்பொழுது ஸ்கண்டிநேவிய நாட்டுப் பிரதிநிதிகளே உள்ளனர். ஏனைய நாட்டுப் பிரதிநிதிகளையும் இதில் அடக்க ஆவன செய்யப்பட வேண்டும் என்றார்.

இதேவேளை, விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இப்பொழுது போர்ண் நகரில் தங்கி நின்று சுவிஸ் அதிகாரிகளுடன் பேச்சுக்கள் நடத்தி வருகின்றதுடன், அங்கு சமஷ்டி ஆட்சிக் கட்டமைப்பு பற்றி ஆராய்ந்து வருகின்றதும், சுவிஸ் வாழ் தமிழர்கள் மத்தியில் அண்மையில் உரையாற்றியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (உ)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் வாகன சாரதிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விபரங்களை யாழ்மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-7)

## செய்முறைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சங்கீத சபை, அகில இலங்கை ரீதியாக நடாத்தும் செய்முறைப் பரீட்சை இன்று முதல் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதாக வட இலங்கை சங்கீதசபைத் தலைவர் தெரிவித்துள்ளார். (உ)

# பிரி.தூதரகம் மீது கல் வீசியவர் கைது

(கொழும்பு)

கொழும்பு-கொள்ளுப்பிட்டியில் அமைந்துள்ள இலங்கைக்கான பிரித்தானியத் தூதரகத்தின் மீது கற்களை வீசிய நபர் ஒருவரை பொலிஸார் மடக்கிப் பிடித்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது,

நேற்று முன்தினம் மு.ப. 10 மணியளவில் மேற்படி தூதரகத்தின் மீது சம்பந்தப்பட்ட நபர் கற்களை வீசியுள்ளார்.

இதனால் தூதரகத்தின் கண்ணாடிகள் உடைந்துள்ளதுடன், தூதரகத்தில் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்த அதிகாரிகள் மத்தியில் குழப்ப நிலை உருவாகியுள்ளது.

இதனையடுத்து, பிரித்தானியத் தூதரகத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அதிகாரி யொருவர் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிச் சூடு நடாத்தி எச்சரிக்கை செய்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில், இது பற்றி தகவல் அறிந்த மேற்படி தூதரகத்தின் முன்பாக பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் கற்களை வீசிய சம்பந்தப்பட்ட நபரை கைது செய்து விசாரணை நடத்தியுள்ளனர்.

இவர்கள் மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் இவர் ஓர் மன நோயாளியாக இருக்கலாம் என்றும், இவரே கடந்த 2 மாதங்களின் முன்பு அமெரிக்கா தூதரகத்தின் மீதும் கல்வீச்சு நடத்தினார் எனவும் கருதப்படுகின்றது.

இதேவேளை, ஈராக் மீதான பிரிட்டிஷ் மற்றும் அமெரிக்காவின் கூட்டுப்படைத் தாக்குதலையடுத்து கொழும்பில் உள்ள அமெரிக்க பிரிட்டிஷ் தூதரகங்களுக்கு விசேட கொமாண்டோப் பாதுகாப்பு வழங் கப்பட்டிருந்தமையும் இங்கு குறிப் பிடத்தக்கது. (உ-10)

# மட்டு.மாவட்டத்தில் இரு புதிய ரயில் நிலையங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தின் இரு இடங்களில் புதிதாக ரயில் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

நிதிதென்ன, வந்தாறுமூலை ஆகிய இடங்களிலேயே இப்புதிய ரயில் நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் ஆலோசகர் அலுசாகீர் மௌலானாவின் வேண்டுகோளுக்கு இணங்க, போக்குவரத்து, பெருந்தெருக்கள் அமைச்சர் இதற்கான அங்கீகாரத்தை வழங்கியுள்ளார்.

புனானை ரயில் நிலையக் கட்டடத்தில் இராணுவத்தினர் முகாமிட்டுள்ளதால் நிதிதென்ன பகுதியிலும், கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களின் நலன்கருதி வந்தாறுமூலையிலும் புதிய ரயில் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.(உ-8)

# சமாதானப் பேச்சை "சார்ஸ்" பாதிக்குமா?

(கொழும்பு)

சார்ஸ் வைரஸ் நோயினால் இம்மாதம் 14ஆம் திகதி தாய்லாந்தில் நடைபெறவிருந்த 7ஆம் சுற்றுப் பேச்சுவார்த்தை இடமாற்றப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பேச்சுவார்த்தை பெரும்பாலும் ஆபிரிக்கா, அல்லது ஐரோப்பிய நாடொன்றில் இடம்பெறலாம் எனவும், இது தொடர்பாக நோர்வே அரசு ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சார்ஸ் நோயினால் தாய்லாந்தில் இதுவரை 7 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், இருவர் மரணமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தை பெரும்பாலும் ஒஸ்லோவில் இடம்பெறலாம் என தகவலறிந்த வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன. (உ-10)

# ஏப்ரல் 10 முதல் 13ஆம் திகதி வரை "பலிக்களம்" தவக்கால ஆற்றுகை

திருமறைக்கலாமன்றம் தவக்கால ஆற்றுகையாக இயேசுவின் திருப்பாடுகளின் காட்சியினை வருடா வருடம் மேடை ஏற்றி வருகின்றது. இவ்வருடமும் "பலிக்களம்" என்ற பக்தி நிகழ்வு ஆற்றுகை செய்யப்படுகிறன்து. ஏப்ரல் 10 தொடக்கம் 13ஆம் திகதி வரை தொடர்ச்சியாக நான்கு நாட்கள் மன்ற அரங்கில் மாலை 7 மணிக்கு ஆரம்பமாகி, இரண்டரை மணித்தியாலங்கள் நவீன உத்திகளுடன் 250 அடி நீளமான பெருங்காட்சிப் பரப்பில் திருமறைக் கலாமன்ற புடம் போட்ட 260 கலைஞர்களின் ஒன்றிணைவில் ஆற்றுகை செய்யப்படுகின்றது.

பலிக்களத்தினை 30 ஆண்டுகளிற்கு முன்பு பேராசிரியர் நீ.மரியசேவியர் அடிகளார் எழுதி, நெறியாள்கை செய்திருந்தார். இவ்வருடம் அரங்கவாதிரி ஜீ.பி.பேர்மினஸ் நெறியாள்கை செய்கின்றார்.

ஒலி,ஒளி,ஒப்பனை, மேடை வடிவமைப்பு யாவற்றையும் மன்ற வளஆளுநர்கள் மேற்கொள்கின்றனர்.

பலிக்களத்தின் வரலாற்றுப் பதிவாக நாட்டின் பல இடங்களிலும், பல்வேறுபட்ட கால சூழ்நிலைகளிலும் 73களில் மேடை ஏற்றப்பட்டதோடு, யாழ்ப்பாணத்தில் தயாரிக்கப்பட்ட முதல் தொலைக்காட்சிச் சிறு திரைப்படம் என்ற பெருமையையும் சேர்த்துக் கொண்டது.

யாழ்ப்பாணம்,கொழும்பில் மட்டுமல்ல பிரான்ஸ், கனடா போன்ற வெளிநாடுகளிலும் இது மேடை ஏறியுள்ளது.

1973இல் முதல்நூலுருப் பெற்று பலரின் வரவேற்பைப் பெற்றதோடு 1993இல் இரண்டாம் பதிப்பும் உருவாக்கப்பட்டது. 'திரி ஒன்று உருகாமல் ஒளியிங்கு இல்லை. விதை ஒன்று மடியாமல் பயிரிங்கு இல்லை' என்ற கூற்றிற்கிணங்க இறைமகன் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பை நினைவுகூரும் பக்தியின் தளம் பாசத்தின் விளைநிலம் தான் பலிக்களம்.

# சிங்கப்பூரில் இருந்து கொழும்பு ஊடாக விரைவு கப்பல் சேவை

(கொழும்பு)

சிங்கப்பூரில் இருந்து கொழும்பு ஊடாக செங்கடல் வரை புதிய கப்பல் சேவையொன்று விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

சீனாவில் உள்ள ஹொங்கோ நிறுவனம், தாய்வானில் உள்ள எவகிறீம்றன்ஹை நிறுவனம், ஜேர்மனியில் உள்ள கட்டகிளைவ் நிறுவனம் ஆகிய முன்னணிக் கப்பல் நிறுவனங்கள் இணைந்து இச்சேவையை நடத்தவுள்ளன.

இதற்கு "செங்கடல் விரைவுச் சேவை" என பெயரிடப்பட்டுள்ளது.

இந்தச் சேவையில் ஈடுபடுத்தப்படும் கப்பல்கள் ஞாயிறு தோறும் கொழும்புத்துறைமுகத்தை வந்தடையும்.

சிங்கப்பூர், மலேசியா, எகிப்து, சவூதிஅரேபியா, இந்தியா ஆகியவற்றின் முக்கிய துறைமுகங்களை உள்ளடக்கும் வண்ணம் இச்சேவை இடம்பெறும்.

எதிர்வரும் 13ஆம் திகதி அதன் கப்பல்கள் இலங்கைத் துறைமுகத்தில்நங்கூரமிடப்படவுள்ளன.(உ-10)

## தினசரி தியானம்

### ஆன்மீகப் புதையல்

உங்களில் கடவுள் மறைந்திருக்கிறார். அழிவற்ற ஆன்மா உங்களுள் இருக்கிறது.செலவழிக்க முடியாத ஆன்மீகப் புதையல் இருக்கிறது. உங்களுள் அருட்பெருங்கடலே இருக்கிறது. அழியக்கூடிய புலன்களின் உணர்ச்சிகளுக்குரிய மகிழ்ச்சி தருபவை ஏதும் இல்லாமையை உணருங்கள். உங்களது ஆன்மாவில் அல்லது அதில் உறையும் இறைவனில். நீங்கள் அமைதி பெற முடியும். பயிற்சி செய்து அனுபவித்து,இறைவன் உங்கள் உள்ளத்தே புதையலாக இருப்பதை உணர்ந்து பேரின்பத்தில் திளைத்து மகிழுங்கள்.

சுவாமி சிவானந்தர்

## தவக்கால நற்சிந்தனை

**"என் நெருக்கடி வேளையில் நான் ஆண்டவரிடம் மன்றாடினேன் அவர் என் குரலைக் கேட்டார்"**

யோவான் நற்செய்தியில் "செயல்கள்"இயேசுவின் வியக்க வைக்கும் அருள் அடையாளங்களையும், அவரது சாதாரண அன்றாட செயற்பாடுகளையும் குறிக்கும். இயேசுவின் செயல்கள் ஒவ்வொன்றும் தந்தையிடம் அவர் கொண்டிருந்த ஆழ்ந்த உறவின் வெளிப்பாடு என்பதால், அவை இயேசுவின் வார்த்தையைப் போன்று தந்தையை அறிவிக்கும் இயல்பைப் பெற்றிருக்கின்றன. இறை இயேசுவில் தந்தையின் பிரசன்னத்தை அவை நிரூபித்தன. எங்கள் செயல்கள் கடவுளுக்கு ஏற்றவையாக இருப்பதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று சீடர்கள். இயேசுவைக் கேட்டதற்கு, கடவுள் அனுப்பியவரை நம்புவதே கடவுளுக்கேற்ற செயல் என்று அவர் பதிலளித்தார்.

ஆழ்ந்த கடவுள் நம்பிக்கைதான் அவர் நம்மில் நிகழ்த்தும் அருஞ்செயல். மனித செயல்கள் ஒவ்வொன்றும் இதய அறையை பிடித்துக் காட்டும் புகைப்படங்கள். பகை, கோபங்கள் மற்றும் கர்வம் போன்றவைகள் இந்த அறையை நிரப்பினால் அதிலிருந்து புறப்படும் செயல்கள் பகைமை அழிவை, அநீதியினை இந்த உலக அரங்குகளில் நிறைக்கும். ஆழ்ந்த நம்பிக்கையிலிருந்து புறப்படும் எந்தச் செயலும் இறை பிரசன்னத்தை உலகுக்கு உணர்த்தும் இயல்பைப் பெறும்.

காவலன்

கலாசார சீரழிவைக் கட்டுப்படுத்த

# யாழ்ப்பாண நீதிமன்றில் இன்று உயர்மட்ட மாநாடு

(யாழப்பாணம)

யாழ்.குடாநாட்டில் சீர்குலைந்து வரும் சட்டம், ஒழுங்கு, சமூக கலாசாரச் சீர்கேடுகள் சம்பந்தமாகவும் அவற்றைத் தடுப்பதற்கான வழிவகைகளைக் கண்டறியும் பொருட்டும் வீதிப் போக்குவரத்து ஒழுங்கு முறைகள் பற்றியும் இன்று யாழ் மாவட்ட நீதிமன்ற வளாகத்தில் உயர்மட்ட மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட நீதிமன்ற நீதிபதி இ.த.விக்கினராசா தலைமையில் நடைபெறவுள்ள இம்மாநாட்டில் குடாநாட்டிலுள்ள 17 பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள், யாழ் மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் பருத்தித்துறை, சாவகச்சேரி, மல்லாகம், ஊர்காவற்துறை நீதிமன்றங்களின் நீதிபதிகளான ஏ.பிரேம்சங்கர், எஸ்.அரியநாயகம், திருமதி ச.இளங்கோவன், பா.சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இன்று நடைபெறும் இந்த உயர் மட்ட மாநாடு பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவின் பணிப்பின் பேரில் கூட்டப்படுவதாக யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்கினராசா தெரிவித்துள்ளார். (வ)

# மலேசிய நிதியுதவியுடன் அரச ஊழியர்களுக்கு வீடுகள்

(கொழும்பு)

மலேசியாவின் நிதியுதவியுடன் அரசாங்க ஊழியர்களுக்கு நாடளாவிய ரீதியில் 25 ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளதாக பொது நிர்வாக முகாமைத்துவ அமைச்சர் வஜிர அபயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

இத் திட்டத்தின் முதற் கட்ட நடவடிக்கையாக காலியில் ஆயிரத்து 500 வீடுகள் எதிர்வரும் மே மாதம் அளவில் நிர்மாணிக்கப்படவுள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் வழிகாட்டலின் கீழ் முன்னெடுக்கப்பட்டு வரும் இப் பாரிய திட்டத்தில் இரண்டாவது கட்டமாக அடுத்த ஆண்டில் கொழும்பில் இத்தகைய வீடுகள் அமைக்கப்படுவது தொடர்பாக தற்போது ஆலோசிக்கப்பட்டு வருகின்றது.

இதேவேளை அரசாங்க உத்தியோகத்தர்களின் சம்பளத்தின் அடிப்படையில் விண்ணப்பங்கள் தேர்ந்தெடுகதப்பட்டு 15 முதல் 20 வருடத் தவணைகளில் வீடுகள் வழங்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் அபயவர்த்தனா தெரிவித்தார். (இ-10)

## புத்தளத்தில்..

நூர்தீன் மசூர் வந்த போது பாடசாலையின் நுழைவாசலில் இருந்த கேற்றை றிசாட் பதியுதீன் எம்.பியின் ஆதரவாளர்கள் இழுத்து மூடினர்.இதனை அடுத்தே அங்கு மோதல்கள் வெடித்தன.மோதல் சமபவத்தை அடுத்து துப்பாக்கிப் பிரயோகம்,கைக்குண்டு வீச்சு மற்றும் தடியடிப் பிரயோகங்கள் மேற்கொள்ளப்பட்டன.

குண்டுவீச்சுக்கள்,துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொள்ளப்பட்ட போது,இடம் பெயர் சேவைக்கு வந்திருந்த கர்ப்பிணிப் பெண் ஒருவர் உட்பட 10 பெண்கள் காயமடைந்த நிலையில் புத்தளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மோதலில் ஈடுபட்டவர்கள் அங்கு குழுமியிருந்த மக்களின் உலர் உணவு நிவாரண முத்திரைகளையும் பறித்தெடுத்து தீயிட்டுக் கொளுத்தினர்.இதனையடுத்து இடம் பெயர் சேவை புனர்வாழ்வு அமைச்சர் பேராசிரியர் ஜயலத் ஜெயவர்த்தனாவினால் உடனடியாக ரத்துச் செய்யப்பட்டது.

இது இவ்வாறு இருக்க, நேற்று றிசாட் பதியுதீன் எம்.பியின் ஆதரவாளர்களுக்கும் அமைச்சர் நூர்தீன் மசூரின் ஆதரவாளர்களுக்கும் இடையே இடம் பெற்ற மோதல்கள் தொடர்பாக இருதரப்பினரும் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பாக புத்தளம் பொலிசார் தீவிர விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

இதேவேளை,புத்தளம் மாவட்ட எம்.பி றிசாட் பதியுதீன் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமின் ஆதரவாளர் என்றும்,வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர் முஸ்லிம் காங்கிரசில் இருந்து பிரிந்து சென்ற அமைச்சர் அதாவுலாவின் ஆதரவாளர் என்றும் இதனாலேயே இம் மோதல் சம்பவங்கள் இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-8)

# மாணவர்கள் வெளிப்படுத்தும் திறமைகளுக்கும் புள்ளிகள்

## பரீட்சைத் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

மாணவர்கள் பாடசாலையில் காட்டிவரும் திறமைகள், ஆற்றல்களை மதிப்பீடு செய்து அவற்றைப் பெறுபேறுகளுடன் சேர்க்கும் திட்டத்தை இவ்வாண்டு முதல் க.பொ.த உயர்தரப்பரீட்சையில் அறிமுகப் படுத்தப் போவதாக பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

பரீட்சையில் மாணவர்கள் காட்டிவரும் ஆர்வம், ஈடுபாடு, மற்றும் அவர்களது திறமைகளை மதிப்பீடு செய்வது கல்வித் துறையில் முக்கிய செயன்முறை. இதனை எழுத்துப் பரீட்சையின் மூலம் மதிப்பீடு செய்ய முடியாது.

இதனால் இவ்வாண்டு முதல் பாடசாலையில் மாணவர்கள் காட்டிவரும் திறமைகள், மதிப்பீடு செய்யப்பட்டு உயர்தரப் பரீட்சையில் அதற்குப் புள்ளிகள் வழங்கல் இடம்பெறும் என்று பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது. (இ)

## சிறுமி மீது...

பிரஸ்தாபச் சிறுமி யாழ்.போதான வைத்தியசாலையில் வைத்தியப் பரிசோதனைக்காக பொலிஸாரால அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பிரஸ்தாப நபர் யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுததப்பட்டு விளக்கமறியலில வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை பிரஸ்தாப நபருக்கு வீடுவழங்கிய ஆனைக்கோட்டையைச் சேர்ந்த நபரும் பொலிஸாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். (வ-7,6)

# சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய முறைசாராப் பிரிவில் 2001-2002 ஆண்டுகளில் பயின்று சித்தியடைந்த மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் யாழ். வலய முறைசாராக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.சிவம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் வலயக் கல்விப் பணிப்பாளர் பி.விக்னேஸ்வரனும் கௌரவ விருந்தினராக யாழ். ஐ.நா. சிறுவர் நிதிய தலைமை அதிகாரி செல்வி செலின் லக்கோ பிரட்டும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை, வலிகாமம் கல்விக் கழகப் பொறுப்பாளர் கவியன்பன், ஐ.நா சிறுவர் நிதியத்தைச் சேர்ந்த அ.ஸ்ரீஸ்கந்தராஜா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-10)

# விவசாயக் குழுக் கூட்டம்

(ஊர்காவற்துறை)

ஊர்காவற்துறைப் பிரதேச விவசாயக் குழுக் கூட்டம் இன்று முற்பகல் 10 மணிக்கு ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்திற்கு விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர் (த-75)

# பொலிஸார் துப்பாக்கிச் சூடு

(வத்தளை)

பொலிஸ் எச்சரிக்கையை மீறி தப்பிச் செல்ல முற்பட்ட வாகனம் ஒன்றின் மீது துப்பாகிப் பிரயோகம் செய்த பொலிஸார் அந்த வாகனத்தில் இருந்து கைக்குண்டுகள்,துப்பாக்கிகள் மற்றும் போதைப் பொருள் என்பனவற்றைக் கைப்பற்றியுள்ளனர்.

எனினும் வாகனத்தில் வந்தவர்கள் ஆயுதங்களுடன் தப்பி ஓடிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த)

## பாதிக்கப்பட்ட...

அதிகாரிகள்,விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவினர்,சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களான ஒக்ஸ்பாம், கெயர்,ஐ.சி.ஆர்.சி., யு.என்.டி.பி., யூ.என்.எச்.சி.ஆர்., டபிள்யு.எச்.ஓ.,டபிள்யு.எவ்.பி., ஜி.ரி.சற்.,ஆகியவற்றின் பிரதிநிதிகள் அமைச்சின் செயலாளர்கள் ஆகியோர் பங்கு பற்றினர்.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன்,பிரதமரின் சமாதானச் செயலகத்தை சேர்ந்த செயலக அதிகாரி டாக்டர் ஜோன் குணரத்தனா,யுனிசெவ் கொழும்புப் பிரதிநிதி ஆகியோர் ஆரம்ப உரை நிகழ்த்தினர். (த)

# தாச்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உடுவில் கிழக்கு அண்ணா விளையாட்டுக் கழகம் யாழ் மாவட்ட தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் நடாத்திவரும் மாபெரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 4.45 மணிக்கு அண்ணா விளையாட்டுக் கழக மைதானத்தில் பண்டத்தரிப்பு சாந்த விநாயகர் விளையாட்டுக் கழகமும் சுன்னாகம் கலைவாணி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (இ-10)

# தொழில் பயிற்சி

(சில்லாலை)

தொழில் கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் பின்தங்கிய கிராமங்களில் உள்ள 17 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட வறுமைக்கோட்டின் கீழ்வாழும் இளைஞர் யுவதிகளுக்கு தொழிற் பயிற்சி தொடர்பான கருத்தரங்கு ஒன்று இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 9 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் நடத்தப்படவுள்ளது. (உ-58)

# விபத்தில் இளைஞன் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் இடம்பெற்ற வான்-மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்து இளைஞரொருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று இடம்பெற்ற இவ் விபத்துச் சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணஞ் செய்த அட்வின் கின்சன் (வயது 24) என்ற இளைஞரே காயமடைந்தவராவார். (த-7)

# சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக் கழக நுண்கலைத் துறையின் ஏற்பாட்டில் ஈழத்து ஆங்கில அரங்கின் முன்னோடிகளின் ஒருவரான எனஸ்ற் மைக்கன்னரன் என்பவருடனான சந்திப்பு இன்று பிற்பகல் 2.00 மணிக்கு யாழ். பல்கலைக் கழக பொருளியல் துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நாடகத்துறை சார் ஆர்வலர்களை இதில் பங்குபற்றுமாறு அழைக்கப்பட்டுள்ளது. (உ)

# பெயர்ப் பட்டியலைப் பார்வையிடலாம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி-பச்சிலைப்பள்ளி பளைப் பகுதியில் மீள் குடியமர்ந்தவர்களுக்கான உதவிக் கொடுப்பனவான ரூபா 25 ஆயிரம் பெற சிபாரிசு செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியல்களை கிராம அலுவலர் பிரிவு, பிரதேச செயலர் அலுவலகம், அந்தந்தப் பகுதி ப.நோ.கூ சங்கங்கள் போன்ற இடங்களில் பார்வையிட முடியுமென பளைப் பிரதேச செயலகர் எஸ்.புத்திசிகாமணி தெரிவித்துள்ளார்.

இவற்றை எதிர்வரும் 18ம்-திகதிக்கு முன்னர் பார்வையிட்டு ஆட்சேபனை இருப்பின் எழுத்து மூலம் அறிவிக்கும் படியும் கேட்டுள்ளார். (ந-5)

# குடும்பஸ்தர் மர்ம மரணம்

(நெல்லியடி)

தனது நண்பரின் வீட்டுக்குச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் அங்கு மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

நேற்றைய தினம் நெல்லியடியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அண்ணாசிலையடி கரணவாயைச் சேர்ந்த 6 பிள்ளைகளின் தந்தையான க.நல்லதம்பி (வயது 56) என்பவரே உயிரிழந்தவராவார்

சம்பவ இடத்திற்குச் சென்ற பருத்தித்துறை மாவட்ட மேலதிக நீதிவான் குமாரசாமி பிரஸ்தாப நபரின் சடலத்தை மருத்துவப் பரிசோதனைக்காக மந்திகை மருத்துவமனையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (த-44)

# 'வான் முழக்கம்' வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

''வான் முழக்கம்'' சஞ்சிகையின் முதலாம் ஆண்டு சிறப்பிதழ் வெளியீட்டு விழாவும் பரிசளிப்பு வைபவமும்,இன்று பிற்பகல் 3 மணிக்கு திருநெல்வேலியிலுள்ள சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை மண்டபத்தில் தினக்குரல் பத்திரிகை ஆசிரியர் பீடத்தைச் சேர்ந்த ஐ.சச்சிதானந்தம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் பிரதம விருந்தினராகவும், யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சஞ்சிகை ஆய்வுரையை யாழ். கூட்டுறவு சமாசத்தலைவர் சீ.வி.கே. சிவஞானமும் அறிமுகவுரையை சஞ்சிகையில் பிரதம ஆசிரியர் வே.தவச்செல்வமும் நிகழ்த்துவர். (இ)

# வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

காலஞ்சென்ற கம்யூனிஸ்ட் கார்த்திகேசனின் 25 வருட நினைவாக புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் எழுதிய ''வடபுலத்து பொதுவுடைமை இயக்கமும் தோழர் கார்த்திகேசனும்'' எனும் நூல் வெளியீட்டு நிகழ்வு நாளை சனிக்கிழமை பி.ப 4 மணிக்கு யாழ்.சிற்றி ஹோல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

முன்னாள் அதிபர் மு.தியாகராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், வெளியீட்டுரையினை இ.தவராஜாவும், கருத்துக்களை சோ.தேவராஜா, சி.நவரட்ணம், க.தணிகாசலம் ஆகியோரும் ஏற்புரையினை கா.செந்திவேலும் நிகழ்த்தவுள்ளார்கள். (உ-10)


RAMCO CEMENT
(ராம்கோ சீமெந்து)

இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட ராம்கோ சீமெந்து இன்று 11.04.2003 வெள்ளிக்கிழமை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையவுள்ளது. தேவையானவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்

தொடர்புகளுக்கு:-
ஈஸ்வர பகவான் அன் கம்பனி
91,ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.:- 021-222 2350 (C/5982)

வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அண்மையில் கஸ்தூரியார் வீதியில் நல்ல சூழலில் சில அடிப்படை வசதியுடன் பெரிய வீடு, வாகனத் தரிப்பிடம், தென்னங்காணி வளவுடன் வாடகைக்குண்டு. பெரிய குடும்பத்திற்கு, கம்பனிகளுக்கு, காரியாலயத்திற்கு, நிறுவனத்திற்கு உகந்தது. வெளிநாட்டு நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். வீட்டுடன் ஒரு பகுதியில் களஞ்சியமாகப் பாவிக்கக் கூடிய வசதியும் உண்டு. மாத வாடகையுடன் 2 வருட முற்பணம். பார்வையிடும் நேரம் காலை 10 மணி முதல் மாலை 7 மணி வரை. மேலும் விபரங்களுக்கு நேரில் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
456, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம் (6895)

உடன் தேவை

கணனி பக்க அமைப்பாளர்கள் (ஆண், பெண் இருபாலாரும்)

பத்திரிகை விநியோகஸ்தர்கள் (சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள்)

சுயமாகத் தயாரித்த சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

வலம்புரி ஆளணி முகாமையாளர்


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.04.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.